தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளி நாடு மூன்றணா. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை 6

மலர் 1	சென்னை	19—3—1955	சனிக்கிழமை	இதழ் 38

"இராவண காவியம்"

காட்டும் தமிழணங்கு !

உருக்குலை படலம் !

[புலவர் குழந்தை காட்டும் "சூர்ப்பநகை"யும்
காமுக ராமனின் கயமையும் சிறுமையும் காண்க]
—கானில் தனித்திருக்கிறாள், இலங்கைக் காவலன்
தங்கை ; கயவன் காணுகிறான்—

தனித்து நின்றவத் தன்னிகர் தையலைத் தடங்கண்
இனித்த வாவிடக் காண்டலு மிழிதகை காமுற்
றினத்தி னீங்கியே யெழிலுடை யிளமயில் போலிப்
புனத்து நின்றிடும் பூவைநீ யாரெனப் புகன்றான்.

கோவை வாய்திறந் திந்நிலம் புரந்திடும் கொடியான் ;
யாவ னேவட வாரியன் போல்தவக் கோலம்
மேவி யேகொடு வில்லுடைக் கையனு விளங்கும்
பாவி போன்றநீ யாரெனக் கேட்கவப் பாவி.

பொன்னம் பாவையாள் போர்குவிலா வயோத்தியைப் புரக்கும்
மன்னன் சுரனுதி ராமனென் சிறன்பெயர் வழங்கும் ;
என்னின் பின்னவ னிலக்குவன், என்மனை சீதை
அன்ன ளோவக வானவ ளழகிலா வடிமை.

மாதும் யானுமென் தம்பியும் தமிழகம் வந்தோம் :
ஏது செய்ததோ நின்னையிவ் விடத்தினிற் கண்டேன்
கோதி லாதபூங் கொடியுன்மேற் காதலுங் கொண்டேன்
பாது காவெனப் பார்வையுஞ் சினந்துளம் பதறி

குன்றி யன்னவிக் கோலமுங் கொலைவிலுங் கொண்ட
கொன்று ணும்புலைக் கொடுந்தொழில் வாழ்வுடைக் கொடியோய் !
நன்றி லாதவிப் பிறர்மனை நயக்குநின் குட்டில்
ஒன்றி வாழ்குநர் மக்களோ மாக்களோ வுரையாய் ?

பரவி நீயய லகம்புகுந் ததுமலாற் பழியும்
மேவி னுய்தமிழ் மறவர்கள் கண்ணுறில் வீவாய் ;
ஆவி யீந்தனன் ஓடிநீ யயோத்தியை யடைந்துன்
தேவி யோடுவாழ் கென்றவ ளின்னுமே சொன்னாள்.

செல்லும் உள்ளுவோ ளுளமினித் திருந்தமிழ்த் தேனை
நில்லு நில்லுமென் றோடிவே நத்தெதிர் நின்று
வல்லி யேபுலை மருவிடா விடிலுயிர் வாழேன்
சொல்லு வாய்தமிழ் வாய்திறந் தெனப்பசுந் தோகை.

காத லென்பதன் பொருளறி யாவிழி காமா !
மாதொ ருத்தியை வழிமறித் தடாதுசெய் வம்பா !
ஆத காதறி விலியிதோர் ஆண்மகற் சழகா !
போது யென்றனைந் தாயிடை நின்றுமே போக

ஏக நான்விடேன் என்றவள் கைபிடித் திழுக்கத்
தோகை மெய்நடு நடுங்கியின் னுயிர்துடி துடிப்பச்
சாகு மாகுமி னுய்விடு தலைபெறத் தவித்துப்
போக நீவிடு வாயெனத் திமிறவே பொல்லான்—

(அடுத்த இதழில் முடியும்)

திராவிடத்திலே இப்போது புதிய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தமிழறிஞர்களைப் பாராட்டுகிற எண்ணம் அதிகமாக வளர்ந்துள்ளது. [அதன் காரணமாக, தமிழைப் படித்துக் 'கெடுத்தவர்கள்'கூடப் பாராட்டப்பட்டு பரிசில் வழங்கப் பெறுகிறார்கள் என்றால் மிகையாகாது. சில இலக்கியங்களைத் தேடி எடுத்துத் தந்து, அவற்றிலே சில இடங்களில் ஆரியநஞ்சு கலந்து வைத்த தோழர் உ. வே. சாமிநாதையரின் நூற்றாண்டு விழா, சமீபத்தில் சென்னையில் சிலரால் கொண்டாடப் பெற்றது. வையாபுரியாருக்கும் இராகவருக்கும் கேடயங்கள் வழங்கப்பெற்றன.]

அதன்றியும், தமிழ் படித்து, அதன் பெருமை காத்து, அதன் வழி நின்று வரும் அருந்தமிழ்ப் புலவராம் நாவலர் சோமசுந்தர பாரதியை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பட்டம் தந்து பெருமைப் படுத்திற்று. இத்தகு நிகழ்ச்சிகள் தமிழார்வம் கொண்ட இளைஞர்களுக்கு மகிழ்வு தரும் என்பதில் ஐயமில்லை. ஆச்சாரியார் போன்ற 'வெற்று அலட்டல்'களுக்கே சிலர் மதிப்புத் தரும்போது பாரதியார் போன்ற உண்மை அறிஞர்களை நாடே ஒருமித்துப் பாராட்டுவதில் ஆச்சரியமில்லை.

லண்டன் சென்று வந்தவருக்கு விருந்து; இத்தாலி சென்று திரும்பியவருக்குப் பாராட்டு; மலேயா போகிறவருக்கு விருந்து, மாலை; மரியாதை - என்றெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருந்த இடத்தில், தமிழ் கற்று அதையே தன் உயிராகக் கொண்ட-பாரதியார் போன்றோருக்கு இப்போது பாராட்டும், பட்டமளிப்பும் நடைபெறுகின்றன. காக்கையும் கழுகும் 'சும்மா' பறந்து வந்ததைப் பாராட்டியநாடு, குயில் பறந்து, பாடி வந்ததைப் பாராட்டுகிறது.

இந்த நேரத்தில், நம்மால் நினைவுகொள்ளப்பட வேண்டிய மற்றொரு பெரும் புலவர் இருக்கிறார். அவர்தான் மறைந்த பேராசிரியர் சுந்தரம் (பிள்ளை). ஒப்பற்ற நாடக நூலாம் மனோன்மணீயத்தை வழங்கிய பேராசிரியர் சுந்தரம், திராவிட சமுதாயத்தின் கலப்பற்ற நாகரிகத்தை மதித்தவர்; அதன் பெருமையில் மகிழ்ந்தவர். 'திராவிடம்' என்ற வார்த்தையை இகழும் 'அடிப்படை இல்லாத ஆராய்ச்சிச் சிங்கங்கள்' தத்தம் அன்னையர் வயிற்றில் கிடந்த காலத்திலேயே, "இந்நாடு திராவிடநாடு" என இடித்துச் சொன்னவர், சுந்தரம். காலத்தால் முற்பட்டதும், அதற்குப் பின்னணியில் அடிப்படை இல்லா நிலையும் இயங்கிய காரணத்தாலே நியாயமாக அவருக்குக் கிடைக்க வேண்டிய புகழ் அவர் காலத்திலே கிடைக்கவில்லை. ஆங்கிலத் தேர்ச்சியும் அரசியலார் உதவியும் மட்டும் அன்று அவருக்கு இல்லாதிருந்திருந்தால், அவர் தொழில் நடத்தக்கூட முடியாமல் பிற்போக்குச் சக்திகள் செய்திருக்கும். அவருக்கு ஒருவகையில் வாய்ப்பாகவும், மறுவகையில் பின்னிழுப்பாகவும் இருந்தது, அவர் கேரளத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்ததாகும். கேரள வாழ்வில் அவருக்கிருந்த வாய்ப்பு, பார்ப்பனீயப் பிடுங்கல் அவரைப் பொறுத்த அளவு அங்கு எதிர்த்து வராத நிலையும், சில ஆங்கிலர்களின் உதவியும் ஆகும். அவ்வாழ்வில் அவருக்கிருந்த பின்னிழுப்பு, அவரது தமிழ்ப் புலமையை மதிக்கும் கூட்டம் அங்கு அதிகமில்லாததாகும்.

ஆயினும், தென்னாட்டில் திராவிட இயக்கம் வளர்ந்த நிலையில், சுந்தரத்தின் பெயர் அடிக்கடி நினைவுகொள்ளப்பட்டது. பல மேடைகளிலும் அவரது சொற்கள் மேற்கோளாயின. அதனால், பார்ப்பனீய வெறிகொண்ட 'ஆனந்த விகடன்' இதழில், பார்ப்பனப் 'பிச்சு'வாம் பி. ஸ்ரீ. என்பார், 'வகுப்பு வெறியின் தந்தை' என சுந்தரத்தை வர்ணித்தார். திராவிடம் என்ற சொல் அரசியல் உருவம் எடுத்ததற்கு அவர்தான் மூலகர்த்தா என விவரித்தார் அந்தப் 'பிச்சு.'

இனவாரி எண்ணங்கொண்ட திராவிடக்காளைகளுக்கு, சுந்தரம் உறவாக நின்றார்; நிற்கிறார். என்றபோதிலும் நியாயமாக அவருக்குத் தரப்பட வேண்டிய பாராட்டும் விளம்பரமும் இன்னும் அதிகமாகும். அதைச் செய்ய வேண்டிய நாள் இதோ வந்து விட்டது.

பேராசிரியர் சுந்தரம், திருவிதாங்கூரைச் சேர்ந்த ஆலப்புழை என்னும் பட்டினத்தில் பெருமாள் பிள்ளை என்பாரின் திருமகனாக, 1855-ம் ஆண்டு ஏப்ரல் பத்தாம் நாள் பிறந்தார். வருகின்ற ஏப்ரல் ஒன்பதாம் நாள் அவரது நூறாவது ஆண்டின் இறுதியாகும். இந்த நாள் மீண்டும் வரமுடியாது. அவரை முழுக்க முழுக்க நினைவு கொண்டு பாராட்ட வேண்டிய நாள் இதேயாகும். நாற்பத்திரண்டு வயதிலேயே இயற்கை எய்திவிட்ட அன்னார், தனது குறுகிய ஆயுட் காலத்திலே திராவிடத்திற்குத் தன்னால் செய்யமுடிந்ததைச் செய்துவைத்தார். சுந்தரத்தின் பெயரை நாடெங்கணும் - பட்டி தொட்டிகளிலும் கூறி, பாராட்ட வேண்டிய பொறுப்பை திராவிடர்களாகப் பிறந்த எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

சுந்தரம் ஆத்திகக் கொள்கையில் வாழ்ந்தவர் என்றாலும் திராவிட இனத்தின் பெருமையைத் தூக்கி நிறுத்த அரும்பாடுபட்டவர். நமக்கு அதுபோதும். அவர் காலத்திலே, அதைச் செய்தார் வேறு யாருமில்லை. அவரோடு உடனிருந்து, ஒரே ஆசிரியரிடத்தில் பயின்ற மறைமலையடிகள் பின்னாளில் தமிழ்ச் சிறப்பை நிலைநிறுத்தினார்.

எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில்லாக் கற்பனையாம்- இராமாயணம் போன்றவற்றை- பத்துப்பாட்டாதி மனம் பற்றினார், பற்றுவரோ என இடித்துக் கேட்டார், சுந்தரம்.

"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள், உள்ளுவரோ மனுவாதி, ஒரு குலத்துக்கொரு நீதி!" என தரம்காட்டிக் கூறினார் சுந்தரம்.

திராவிடத் திருநாட்டில், எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கைப் பார்த்து, "உன்உதிரத்திருந்துபலமொழிகள் தோன்றினும், ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாமலிருக்கும் உன் சீரிளமைத் திறம் வியந்து செயன்மறந்து வாழ்த்துகிறேன்" என்றவர் சுந்தரம்.

"சதுமறை ஆரியம் உன்னைக் கெடுக்குமுன் சக முழுதும் நினதே, தமிழ்த்தாயே!" என்றவர், சுந்தரம்.

அத்தகு பேரறிஞரை, பேராசிரியரை, பெருமைப்படுத்து முகத்தான் தென்றல், மலர் வெளியிடுகிறது. அதோடு, ஏப்ரல் 9-ம் நாள் முதல் எட்டுத் தினங்கள் வரை அந்தந்த இடங்களுக்கு வசதியுள்ள நாட்களில் "பேராசிரியர் சுந்தரம் நூற்றாண்டு விழா" நடத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். "சாமிநாதையர் நூற்றாண்டு விழா, முப்பது பேர்கொண்ட கூட்டத்தில் நடந்தது; ஒரே இடமாக சென்னையில் மட்டுமே நடந்தது. தினமணி, இரண்டுமுழுப் பக்கங்களில் அந்தச் செய்தியை வெளியிட்டது. சோமசுந்தர பாரதியாரின் பாராட்டு விழாச் செய்தியை ஒரு மூலையில் போட்டு இருட்டடிப்புச் செய்தது.

பார்ப்பனீயம் எச்சரிக்கையாகச் செயல்படுகிறது. தரம் குறைந்த பார்ப்பனரையெல்லாம் விளம்பரப் படுத்துகிறது. தமிழர்களே! திராவிடர்களே! சுந்தரத்தின் புகழை எங்கும் கூறுங்கள்! ஏப்ரல் 9 முதல் எட்டு நாட்கள்! மறந்துவிடாதீர்கள்!

முதன் முதலாக ஆம்பூர் திருவள்ளுவர் கழகம் அந்த விழாவைக் கொண்டாடப் போகும் செய்தியை நமக்கு அறிவித்திருக்கிறது. 17-4-55 அன்று அந்தக் கொண்டாட்டம் ஆம்பூரில் நடைபெறப் போகிறது. மற்ற வள்ளுவர் கழகங்கள், மன்றங்கள் இந்தச் சீரிய பணியினைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

அதுபற்றிய செய்திகளை அனுப்பினால், தென்றல் வெளியிடும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

◎



டி. டி. கே. ராஜினமா, பிள்ளை விளையாட்டு என்கிறார் நமது கார்டூனிஸ்ட்.

ஆசை

ஐயோ, பாவம். அந்த ஆசை அவனுக்கு ஏன்தான் வந்ததோ? தானுண்டு, தனது பெட்டிக்கடை உண்டு என இருந்தவன்தான். எப்படியோ அவன் உள்ளத்திலே சினிமாப் பித்து குடிபுகுந்துவிட்டது. எந்த வகையிலாவது தனது முகத்தை வெள்ளித்திரையில் காண்பித்து விடவேண்டுமென்று துடித்தான். கடைக்கு வருவோர் போவோரிடமெல்லாம் சினிமாவைப் பற்றியே பேசுவான். அந்தப் படத்தில் அவர் அப்படி நடித்திருக்கக்கூடாது; இந்தப் படத்தில் இவர் இப்படி நடித்திருக்கக்கூடாதுஎன்று கதைக்க ஆரம்பித்துவிடுவான். அவனுடைய இந்தச் சினிமாப் பித்தை பயன்படுத்திக்கொண்டு எத்தனையோ எத்தர்கள் தாங்கள் வாங்கின 'சிகரெட்'டுகளுக்குக்கூட காசு கொடுக்காமல் ஏமாற்றியிருக்கிறார்கள், பெட்டிக்கடை மாணிக்கம் இதையெல்லாம் பொருட்படுத்துவதே இல்லை.

மாணிக்கத்திற்குப்பலவகைப்பட்ட நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில், உண்டது செரிக்க கண்டதைப் பேசி காலத்தைக் கழிக்கும் பெரிய இடத்துப் பிள்ளைகளும் முன்பின் தெரியாததையெல்லாம் கண்டேன், களிப்புற்றேன் என்று பெருமை அடித்துக்கொள்ளும் அதிர்வேட்டு மைனர்களும், முகஸ்துதி விசிறிகளும்தான், மாணிக்கத்தின் கடையை பள்ளிக்கூடமாக நினைத்துக்கொண்டு தினசரி வந்துபோகும் "பாலகர்"களாக இருந்தார்கள். "மாணிக்கம், உனக்கு நல்ல முகவெட்டிருக்கிறது; தொண்டையோ வெண்கலநாதம்; உனக்கெல்லாம் சினிமாஉலகத்தில் நல்ல 'சான்ஸ்' இருக்கிறது; கண்டிப்பாக உன்னை எடுத்துக்கொள்வார்கள்" என்று புகழ் பாடிக்கொண்டே ஒரு 'பாக்கெட்' சிகரெட்டை எடுத்து பைக்குள் போட்டுக்கொள்ளும் மலை விழுங்கிகளாலேயே மாணிக்கத்தின் கடை மூடப்பட்டு விட்டதென்றால் யாரும் ஆச்சரியப்படமாட்டார்கள். பெட்டிக்கடை மாணிக்கம் அந்த ஊருக்கே கேலிச்சித்திரமாகிவிட்டான்.

கடைக்கு மூடுவிழா நடத்தி ஒரு வாரத்திற்கெல்லாம், ஊரில் மாணிக்கத்தின் நடமாட்டத்தைக் காணவில்லை. ஈடு இருந்த நிலத்தை கிரயமாக்கி அதனால் கிடைத்த இருநூறு ரூபாயை எடுத்துக்கொண்டு சினிமாவில் சேருவதற்காக சென்னபட்டணம் போய்விட்டதாக ஊர் முழுதும் பேசப்பட்டது. உண்மையும் அதுதான்!

சென்னைக்கு வந்த மாணிக்கம் ஓட்டல் ஒன்றில் தங்கினான். பிரபல நடிகரைப்போல உடை உடுத்திக்கொண்டான். கையிலிருந்த இருநூறு ரூபாயை அவன் பெருந்தொகை என்று எண்ணிக்கொண்டான் போலும். ஒருவார காலத்திற்குள் சென்னையிலுள்ள ஸ்டுடியோக்களுக்கெல்லாம் போய்ப் பார்த்துவிட்டான் மாணிக்கம். ஆரஞ்சுக் கலரைக் கொடுத்து, மாணிக்கத்தின் விலாசத்தை, வாங்கி வைத்துக்கொண்டு 'நமஸ்தே' போட்டு அனுப்பினார் ஒரு ஸ்டுடியோக்காரர்; 'ஆகட்டும், பார்ப்போம்; அடுத்த படம் ஆரம்ப பூஜை அன்றைக்கு வாருங்கள்'. என்றார் மற்றொரு ஸ்டுடியோக்காரர். "மாஸ்டர், மாணிக்கம், நெக்ஸ்ட் பிக்சரிலே ஷ்யூராக ஒரு சான்ஸ்! டோன்ட் ஒரி!" இப்படி ஒரு படமுதலாளி, ஆங்கிலத்தை தமிழ் பாணியிலே சொல்லி அனுப்பினார். பையிலே ஒரு பைசாகூட இல்லையே என்ற கவலையே படமுதலாளிகளின் இந்தப் போதை தரும் பேச்சில் மாணிக்கத்தின் நினைவுக்கு வரவில்லை. ஆசைக்கு ஏது வெட்கமும், துக்கமும்!

ஓட்டல் மாணிக்கம் ஒட்டுத்திண்ணை மாணிக்கமானான். அழுக்கேறிய அவனுடைய மாற்றுடைகளே அவனுக்குத் தலையணையாயின. இப்போது அவன், ஒரு ஸ்டுடியோவின் பக்கத்திலுள்ள ஆலமரத்தடிக்கேகுடியேறிவிட்டான். மாணிக்கம், அவனுடைய ஆசைப்படி ஒரு நடிகனால் பசிக்கொடுமைக்காளான ஒரு பிச்சைக்காரன் பாத்திரத்திற்கு மிக மிகப் பொருத்தமான நிலைக்கு வந்துவிட்டான். கிழிந்த சட்டை, குழிவிழுந்த கண்கள், நீண்ட தாடி, நெஞ்செலும்பு தெரியக்கூடிய உடலமைப்பு-இவைதானே உண்மையான பிச்சைக்காரனைப் பற்றி குறிப்பிடத் தகுந்த சிறப்பு (!) அம்சங்கள்! இவையெல்லாமே மாணிக்கத்திற்கு அமைந்துவிட்டன.

காலையிலேயே ஸ்டுடியோ வாயிலுக்கு வந்துவிடுவான். காரிலும், சைக்கிளிலுமாக ஸ்டுடியோவுக்குள் போகிறவர்களுக்கெல்லாம் மாணிக்கம் ஒரு சலாம் போடுவான்.

அதுவும் கதாநாயகர்கள் யாரையாவது பார்த்துவிட்டால் கைகூப்பி வணங்கிவிடுவான்! நடிப்புத்துறையிலே அவனுக்கு அவ்வளவு ஆசை! இல்லை; வெறி! வெறி!!

பூமிநாதன் அந்தப் பெயரில்லாத ஸ்டுடியோவின் மேனேஜர்.....அவர் நினைத்தால் எதுவும் செய்யலாம். காசு பெறும் பானத்தை கை கழுவும் தண்ணீராகக்கூடப் பயன்படுத்துவார்; ஆனால் அந்த கருணாமூர்த்தி(!)யின் கண்கள் மாணிக்கத்தின் பக்கம் திரும்புவதேயில்லை. பூமிநாதன் கண்ணில் மாணிக்கம் பட்டுவிடக்கூடாது. எரிந்துதான் விழுவார் அந்த அன்புக்கரசர்! எத்தனையோ முறை மாணிக்கத்தை பூமிநாதர் எச்சரித்திருக்கிறார், வாசலிலே நிற்கக் கூடாதென்று! மாணிக்கம் கேட்டால்தானே! அவன் கேட்டாலும் அவனுடைய ஆசை அவனை விட்டால்தானே!

காலை பத்துமணி! அன்றும் மாணிக்கம் ஸ்டுடியோ வாசலில்தான் நின்றான்: பூமிநாதர் வந்தார். மோட்டார் நின்றது. 'டேய், உனக்கு புத்தி இருக்கிறதா? ஒரு மனிதனுக்கு எத்தனை தடவை சொல்வது? மரியாதையோடு போய் விடு! இல்லாவிட்டால் போலீசுக்கு 'ரிப்போர்ட்' கொடுத்துவிடுவேன்" என்று அனல் கக்கிவிட்டு, பூமிநாதர் போய்விட்டார். மாணிக்கம் நின்ற இடத்தைவிட்டு அசையவே இல்லை. வழக்கமாகப் பார்க்கிற கதாநாயகியையும், கதாநாயகனையும், டைரக்டரையும் பார்த்துவிட்டுத்தான் போகவேண்டும் என்பது அவனது எண்ணம். ஆனால், அவர்கள் நெடுநேரம் வரை, வரவேயில்லை! தினசரி வந்துதான் ஆகவேண்டும் என்று கட்டளை ஒன்றுமில்லையே!

வெகுதூரத்தில், ஒரு கார் வருவதை மாணிக்கம் பார்த்தான். பெரியதொரு அரசியல் தலைவனுக்கு வரவேற்பளிக்கக் காத்துக்கிடந்த தொண்டன், அந்தத் தலைவன்வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டவுடன் எப்படி நடந்துகொள்வானோ அப்படி நடந்துகொள்ள ஆரம்பித்துவிட்டான். மாணிக்கம் தாடியை ஒருமுறை தடவினான்; விரிந்து கிடந்த தலைமுடியை சரிப்படுத்திக்கொண்டான். மோட்டார் அருகில் வந்துவிட்டது. மாணிக்கம் துடித்தான். அதற்குள்ளாக, ஸ்டுடியோவுக்குள்ளிருந்து இருவர் ஓடி வருவதை மாணிக்கம் பார்த்துவிட்டான். பூமிநாதனால் ஏவிவிடப்பட்டவர்கள்தான் அவர்கள் என்று மாணிக்கத்திற்கு நன்றாகத் தெரியும். எனவே, மாணிக்கம் ஓடினான்; வந்தவர்களும் அவனை விட்டபாடில்லை! விரட்டினார்கள். வறுமையால் பீடிக்கப்பட்டவன், எவ்வளவு தூரம்தான் வேகமாக ஓடமுடியும்? சோர்ந்து போனான்-அதோடு, கால்கள் இடறி எதிரே வந்த அந்த மோட்டாரின் முன்பாகவே விழுந்துவிட்டான். மாணிக்கம் அந்த மோட்டாரின் சக்கரங்களுக்கு தன்னுடைய உயிரைக் காணிக்கையாக்கி விட்டான். விரட்டிப்போன ஸ்டுடியோ வேலையாட்கள் கல்லாக நின்றார்கள். காருக்குள்ளிருந்த அந்த ஸ்டுடியோவின் கதாநாயகன் இறங்கினார். நடந்ததை விசாரித்தார். "டைரக்டர் ஸ்டுடியோவுக்கு வந்ததும், வாசலிலே நிற்கிற பிச்சைக்காரனைக் கூட்டி வாருங்கள்; எங்கிருந்தாலும் அவனைத் தேடிப் பிடித்து வந்துவிடுங்கள் என்றார்; நாங்கள் இவனைக் கூப்பிட வந்தோம்; இவன் ஓடினான், நாங்கள் விரட்டினோம்; இப்படி ஒரு விபரீதம் நடக்குமென்று எங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றார்கள் அந்த ஸ்டுடியோ பணியாட்கள்.

அக்கம் பக்கத்தில் கூடி நின்றவர்கள் 'பிச்சைக்காரன்,டைரக்டரை என்ன செய்தான்' என்று கேட்டனர்.அதற்கு அந்தக் கதாநாயகன் "பிச்சைக்காரன் ஒன்றும் செய்யவில்லை. இன்றைய படப்பிடிப்பில் ஒரு பிச்சைக்காரன் கட்டம் வருகிறது; அந்தப் பாத்திரத்தை இவரை விட்டு நடிக்கச் சொல்லலாமென்றுதான் டைரக்டர் கூட்டிவரச்

சொல்லியிருப்பார்" என்றார். எல்லோர் முகத்திலும் கவலைக்குறி படர்ந்தது.

மாணிக்கத்தின் ஆசை நிறைவேறவில்லை! அந்த ஆசையை நிறைவேற்றும் பணியில் மூழ்கியவன்தான் பிணமாகிவிட்டான்!

பன்மலர்ச் செண்டு

யார் . . . ?

பிரபல பிரெஞ்சு நாவலாசிரியர் அலெக்சாண்டர் டூமாசுக்கு ஒரு மாணவர் கடிதம் வரைந்தார். அதில் "ஒரு நாடகம் எழுத நினைக்கிறேன். அதை நாமிருவரும் சேர்ந்து எழுதலாம்" என்று குறிப்பிட்டிருந்தார்- அதற்கு டூமாஸ் "கழுதையுடன் குதிரை எப்படிச் சேர்ந்து எழுத முடியும்?" என்று பதில் வரைந்தார். உடனே அந்த மாணவர், "என்னைக் குதிரையென்று நீர் எப்படிக் குறிப்பிடலாம்?" என்று கோபமாக எழுதினார். அலெக்சாண்டர் டூமாஸ் அக்கடிதத்தைப் பார்த்ததும் "உமது நாடகத்தை அனுப்பிவையும் தோழரே" என்று அந்த மாணவருக்குக் கடிதம் எழுதி விட்டார்!

★

எப்படி முடியும்?

ஒரு அமெரிக்க நடிகை பேரறிஞர் பெர்னாட்ஷாவைப் பேட்டி கண்டு பேசிக் கொண்டிருந்தாள். "அமெரிக்க நடிகைகளைப் போல பிரிட்டிஷ் நடிகைகள் முன்னுக்கு வர முடியாது!" என்றாள் அந்த நடிகை. "ஆமாம்! பிரிட்டிஷ் நடிகைகள் முழுக்கத்திறந்து போடத் தயங்குகிறார்கள்" என்று பதிலளித்தார் ஷா!

★

அசல்!

மேல் நாட்டில் ஒரு நகரத்தின் வீதிகளில் ஒருவன் "நான் தான் பேராசிரியர் புரூஸ்! பேராசிரியர் புரூஸ்!" என்று சொல்லிக்கொண்டு திரிந்தான். சட்டம், அமைதியைப் பாதுகாக்கும் போலீசார் அவனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டனர். சில நாட்களுக்குப் பிறகு அவன் ஆஸ்பத்திரியிலிருந்துதப்பிவிட்டான்,உடனே அதிகாரிகள் "பேராசிரியர் புரூஸ் தப்பி ஓடி விட்டார்" என்று அறிவித்தனர். மறு நாள் போலீசார் ஒருவரை ஆஸ்பத்திரி அதிகாரிகளிடம் கொண்டு வந்து சேர்த்தனர். அவர் உண்மையான பேராசிரியர் புரூஸ்!

★

உண்மை கூடாது!

சமீபத்தில் இங்கிலாந்தில், "பெண்கள் தங்கள் உண்மையான வயதைச் சொல்லலாமா?" என்பது பற்றி வெவ்வேறு துறைகளிலுள்ள நான்கு பெண்களிடம் கேட்கப்பட்டது. அதில் மூவர், "உண்மையான வயதைச் சொல்லுவதுதான் நல்லது. பொய்சொன்னால் எப்படியும் வெளியாகி விடும்" என்றார்கள். ஆனால் ஒரு ஆசிரியை "உண்மையான வயதை ஒரு போதும் சொல்லக் கூடாது! பல நூற்றாண்டுகளாக நாம் பொய்தான் சொல்லி வந்திருக்கிறோம். இன்று திடீரென்று உண்மையை சொன்னால்-அதாவது உண்மை வயதான 40 என்றால் அவர்கள் 45 என்று தான் நினைப்பார்கள். ஆகவே ஐந்து வயது குறைத்தே சொல்ல வேண்டும்" என்றாளாம்,

நாட்டிலே எந்தவொரு நன்முயற்சிக்கும் தடங்கல் செய்வது என்பது இன்று, அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது! நல்ல செயலா, அல்லது தீய செயலா என்று பகுத்தறியும் மக்கள், இந்தப் பகுத்தறிவுக் காலத்தில்கூட இல்லாதது வியப்பாகத்தான் இருக்கிறது! நல்ல செயல் என்று எல்லோரும் வரவேற்கும் செயலை—வாழ்த்தும் பணியை ஒரு 'சுயநலக் கூட்டம்' வெறுக்கிறது—வெறுத்து ஒதுக்குகிறது. உளளபடியே அத்தகைய 'வீணர்கூட்டத்தைக்' கண்டுவேதனை கொள்கிறோம். அந்த வீணர்கள் இன்னும் நாட்டில் இருக்கிறார்களே என்று விசாரப்படுகிறோம்! 'வீணர்கள்' என்றுமே—எந்தவொரு நற்செயலுக்குமே முட்டுக்கட்டை போட்டு வந்திருக்கின்றனர். நற்செயல் என்று நாம் சொன்னால் அவர்களும் சொல்வர்; ஆனால் மறைமுகமாக இருந்துகொண்டு, தடங்கல் செய்வர். ஆனால், இன்று சில வீணர்கள் தமிழ்மறையாம் திருக்குறளிற்கு நேரடியாகவே அவமதிப்புத் தர ஆரம்பித்திருக்கிறார்கள்.

பொதுவாக, இந்த நூற்றாண்டு மிகச் சிறந்த நூற்றாண்டாகும். திருக்குறள் இந்த நூற்றாண்டிலே எல்லோராலும்போற்றப்படுகிறது—புகழப்படுகிறது. திண்ணைப்பள்ளி முதல் திரைப்படம் வரை திருக்குறள் பேசப்படுகிறது. திருமணம் என்றால் அங்கே திருக்குறள் ஒலிக்கப்படுகிறது. 'தமிழ்விழா' என்றால் அங்கே திருக்குறள் பெருமைப் படுத்தப்படுகிறது. இசையென்றால் அங்கே திருக்குறள் ஒளிர்கிறது. ஒருவன் தவறு செய்தான் என்றால் அவனைத் திருத்த முற்படுவோன் திருக்குறளைச் சொல்லித் திருத்துகிறான். அந்த அளவிலே, வாழ்க்கைக்குத் திருக்குறள் இன்றியமையாதது என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டிலே பல இடங்களில் 'குறள் வகுப்புகள்'கூட நடைபெறுகின்றன. குறளிற்கு உரையாசிரியர்களும் நிறையத் தோன்றுகின்றனர். அவர்களில் பலர் குறளிற்கு இன்றைய நவீன காலத்திற்கேற்ப உரை கூறுகின்றனர். உள்ளபடியே அவர்தம் 'புத்துரைகள்' வரவேற்கப்படுகின்றன—ஒப்புக்கொள்ளவும் படுகின்றன.

திருக்குறளின் மீதுள்ள பற்றுதல் காரணமாக அடிக்கடி 'திருக்குறள் மாநாடுகள்' கூட்டப்படுகின்றன. அந்த முறையில் திருக்குறள் பெருமதிப்புப் பெற்றுவிட்டது. இதைக் காணும்போது 'வள்ளுவன் இல்லையே!' என வருந்துகிறோம்!

இவ்வாறு நாடெல்லாம் புகழப்படும் திருக்குறள் அரசியலார் கண்களிலும் பட்டது. அவர்கள் பள்ளிகளில் (ஐந்து ஆண்டுகட்கு முன்பே) குறளைக் கட்டாய பாடமாக்கினர். பள்ளிகளில் 'நீதி வகுப்புக்'களில் **(Moral Instruction Period)** குறள் போதிக்கப்பட்டது—போதிக்கப்பட்டு வருகிறது. 'அக்கிரகாரத்'தின் ஆதிக்கம் நிறைந்துள்ள அனைத்திந்திய வானொலியின் திருச்சி நிலையம்கூட ஓரளவு குறளை வரவேற்கிறது. குறள் மொழியை ...ள் வரவேற்கின்றனர் என்ற உண்மையை உணர்ந்த காரணத்தால், ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலை 7-30 மணியிலிருந்து 7.35 வரை, ஐந்து நிமிடங்கள் 'வள்ளுவர் சொல்லோவியம்' என்ற தலைப்பில் குறள் நிகழ்ச்சியை ஒலிபரப்புகிறது.

அடுத்து, 'தமிழுக்குத் தொண்டு செய்கிறோம்' என்று சொல்லிக்கொண்டு மதப்பிரச்சாரம் செய்து வரும் மடாதிபதிகள்கூட குறளின் முக்கியத்துவத்தை,—நாட்டிலே அதற்குள்ள நன்மதிப்பை உணர்ந்து 'குறள்பணி' செய்ய முற்பட்டிருக்கின்றனர்.

திருப்பனந்தாள் காசி மடாதிபதி நல்லதொரு செயலைச் செய்ய முன் வந்திருக்கிறார். தமிழ் வளர்ந்த மதுரை நகரிலே மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள பொற்றாமரைக் குளத்தைச் சுற்றி, திருக்குறள் வாசகங்கள் பொறித்த சலவைக் கற்களைப் பதிக்க முன் வந்திருக்கிறார். பதினேழாயிரம் ரூபாய் செலவு செய்யப்போகிறார் இந்தப் பணிக்கு. உள்ளபடியே இதனை வரவேற்கிறோம். குறட்பணியைக் கோயிலில் செய்வதற்குத்தானே முன் வருகிறார்கள்! பள்ளிக்கூடங்களில் குறள் வாசகங்கள் பொறித்த பலகைகளையோ, கற்களையோ பண்டார சன்னதிகள் தங்கள் செலவில் செய்ய முன்வந்தால் நாம் இன்னும் மகிழ்ச்சியுறுவோம். இருப்பினும், பதினேழாயிரம் ரூபாய்களை தமிழுக்காக—திருக்குறளிற்காகச் செலவு செய்வதைப் போற்றுகிறோம்.

இந்த மாதிரி ஒரிருவர், துணிந்து குறளைப் பரப்ப முன்வரும்போது, அதைக்கூட இந்த 'அக்ரகாரம்' அனுமதிக்க மறுக்கிறது. மேற்சொன்னபடி திருக்குறள் வாசகங்கள் நிறைந்த சலவைக் கற்களைப் பதிக்க, மதுரை மீனாட்சியம்மன் கோயில் தேவஸ்தானக் கமிட்டியிலுள்ள 'அக்கிரகார'க் கூட்டம் மறுத்திருக்கிறது - நிராகரித்திருக்கிறது-கமிட்டிக் கூட்டத்தையே ஒத்தி வைத்திருக்கிறது. எம். கே. எம். எஸ். லட்சுமண ஐயர் என்பவரும், டாக்டர் சுப்பிரமணியம் என்பவரும் அதை நிராகரித்திருக்கிறார்கள். டாக்டர் சுப்பிரமணியம் போன்றவர்களுக்குத் திருக்குறள் தேவைப் படாமலிருக்கலாம். ஆனால், இன்றைய மக்களுக்கு அது இன்றியமையாததாகவல்லவா இருக்கிறது? குறள், தமிழ்மறை! எனவேதான் அதைப் பரப்புவதை 'அக்கிரகாரம்' எதிர்க்கிறது. அக்கிரகாரத்தார் தமிழுக்கு ஊறு தேடுவதைத் தங்கள் தொழிலாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் புல்லுருவிகளுக்குப் பன்முறை எச்சரித்துவிட்டோம்! எனினும் அவர்கள் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ளவில்லை. மாற்ற முயற்சிக்கவும் இல்லை! "தமிழ் கூறும் நல்லுலக'த்தில்தான் அந்தத் துரோகர்களும் வாழ்கின்றனர். "தமிழ் மக்களோடு கலந்துவிட்டதால் நாங்களும் தமிழர்கள்" என்று சொல்லிக்கொள்கின்றனர். தமிழன்பர்கள் என்று சொல்லிக்கொண்டே தமிழுக்குத் தீங்கு தருகின்றனர்.

திருப்பனந்தாள் மடாதிபதியின் (பயன்தரு) திட்டத்திற்கு வழி செய்துதர வேண்டாம் என்று சொல்லிவிட்டனர், தேவஸ்தானக் கமிட்டி (அக்கிரகார) உறுப்பினர்களான லட்சுமண ஐயரும், டாக்டர் சுப்பிரமணியமும். திருக்குறளில் 'மருந்து' என்ற அதிகாரத்திலுள்ள,

"மருந்தென வேண்டாவாம்
யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

என்ற குறளால் தனக்கு வரும்படி குறைந்துவிட்டது என்று டாக்டர் சுப்ரமணியம் எண்ணுகிறார் போலும்! அக்கிரகார உறுப்பினர்கள் இருவரும், மேற்சொன்ன திட்டத்திற்கு அனுமதி கிடையாது என்று தாங்கள் சொன்ன தோடமையாமல் கமிட்டியை 'முடிவு செய்யக்கூடாது' என்றும் கமிட்டிக் கூட்டத்தையே ஒத்திவைக்கும்படியும் சொல்லியிருக்கிறார்கள்.

இதனால் மதுரையிலுள்ள தமிழார்வம் மிக்க மக்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள். சிலர் இந்த இழி நிலையைப் போக்க, அறநிலையப் பாதுகாப்புத் தலைவரையும் ஏனைய சம்பந்தப்பட்டவர்களையும், சந்தித்துப் பேச—பேசி நல்வழி காண—முடிவுசெய்திருக்கிறார்கள்.

திருந்தாத மக்களாக வாழும் 'அக்கிரகாரக் கூட்டத்தார்க்கு' எச்சரிக்கை விடுகிறோம். பயனுள்ள திட்டத்தை-தமிழ்ப்பணி பழுதறச் செய்து இன்புறும் செயலை - குறள் பணி செய்து கோடி பலன் பெறும் வழியைத் தடுக்காதீர்கள். தடுத்தால் உங்கள் வாழ்வு அடுத்துவிடும்.

—தமிழ்ப்பித்தன்

தத்துவம்

காரை முத்துப்புலவர்

மனிதனுக்கு வரும் சந்தேகங்கள் பல. ஆயினும் சில இயற்கை நிகழ்ச்சிகளிலும் நடை முறைகளிலும் அவன் அந்தச் சந்தேகத்தைக் கிளப்பி பதில்காண முயல்வதில்லை. சொல்லப்போனால் அவற்றிலே பல அவனுக்கு சாதாரணமாகப் போய் விட்டன. கிளறிப்பார்த்தால் வேடிக்கையான தத்துவங்கள் கிடைக்கும். ஆயினும்அவன் கிளறுவதில்லை. உதாரணமாக, காலில் செருப்புப் போட்டு நடக்கும் ஒருவன், அந்தச் செருப்புத் தேய்ந்ததும் அடுத்த செருப்பு வாங்கிக் கொள்கிறான். இந்தச் செருப்பு எப்படித் தேய்ந்தது என்று ஆராய்வதில்லை. செருப்பு, நடக்க நடக்கத் தேயும் என்பதோடு விட்டு விடுகிறான். ஆராய்ந்தால், அது எப்படித் தேய்ந்தது என்று தெரியாமலே அணு அணுவாகத் தேய்ந்தமையும், ஊதியம் கேட்காமல் ஊழியம் புரிந்தமையும், ஒரு தத்துவமாகப் பரிணமிக்கும். இதெல்லாம் ஆராய்ச்சி செய்ய அவன்எண்ணுவதே இல்லை.

ஆனால், இது போன்றவற்றை ஆராய்ந்தால் எவ்வளவு வேடிக்கையாக இருக்கும்? இதோ ஒரு அருமையான ஆராய்ச்சியை எடுத்துத் தருகிறேன், கேளுங்கள்.

தாசி ஒருத்தி. ஒரு நாள் அவளுக்கு ஒரு சந்தேகம் வந்தது. என்ன வென்றால், தன்னிடத்திலே வருகிற ஆடவர்கள், தாங்கள் மட்டும் இன்பம் காணுவதில்லை, தனக்கும் இன்பம் தருகிறார்கள். அங்கே இன்பம், இருவருக்கும் சமமாகக் கிடைக்கிறது. இன்பமே பொருளாதாரப் பரிமாற்றம் ஆகிவிடுகிறது! யாருக்கும் யாரும் விலை கொடுக்க வேண்டியதில்லை. அப்படியிருக்க தன்னிடம் வரும் ஆடவர்கள் "இன்பத்தையும் தந்து விட்டுப்பணத்தையும் தந்து போகிறார்களே, ஏன்?" என்று சிந்திக்கிறாள். நியாயமான சந்தேகம் தானே? இது வரை யாராவது இப்படி ஒரு சந்தேகத்தில் ஆராய்ச்சி நடத்தியது உண்டா? ஏன் ஆண் மட்டும் பெண்ணுக்கு விலை கொடுக்க வேண்டும்? வெகு காலமாக சாதாரணமாக நடந்து வந்த இந்த நிகழ்ச்சி, அந்தத் தாசிக்கு சந்தேகத்தைக்கிளப்புகிறது அவள், தான் ஆராயாமல் தன் தோழியின் பால் இதைக் கேள்வியாகப் போட்டு, அவளிடமிருந்து தத்துவத்தை எதிர்பார்க்கிறாள்!

தோழியிடம் கூறுகிறாள்.

அன்னையே அனைய தோழி !
அறந்தனை வளர்க்கும் மாதே !
உன்னையோர் உண்மை கேட்பேன் ;
உரைதெளிந் துரைத்தல் வேண்டும் !
என்னையே புணரு வோர்கள்
எனக்குமோர் இன்பம் நல்கிப்
பொன்னையும் கொடுத்துப் பாதப்
போதினில் வீழ்வதேனோ ?

தோழி யோசித்தாளா? அவள் இதுபற்றிய சந்தேகத்திற்கு, முன்னாலே தத்துவம் தயாரித்து வைத்திருக்கிறாள். அவள்தான், அந்தக் குல ஒழுக்கம் வளர்க்கும் மாதாயிற்றே!

"அடி தலைவி! பொம்மெனப் பணைத்து விம்மிப்போர்மதன் மயங்கி விழும் கொம்மைசேர் தனம் கொண்டவளே! உலகத்தில் ஒழுங்கான தர்மம் செய்யாத கருமிகள் இருக்கிறார்களல்லவா, அவர்களது பணத்தைக் கெடுத்து 'ரோலிங்'குக்கு அனுப்புவதற்கென்றே, சிருஷ்டி இலாகா மந்திரி பிரமன் நம்மையும் கள்ளையும் சூதையும் திரிசூலமாகப் படைத்தான்!" என்கிறாள். இல்லையென்றால், ஆடவன் மட்டும் விலை கொடுக்கும் நிலை ஏன் தோன்றப்போகிறது! எப்படி இந்தத் தத்துவம்!

பாட்டைப் பார்ப்போம்:

பொம்மெனப் பணைத்து விம்மிப்
போர்மதன் மயங்கி வீழும்
கொம்மைசேர் தனத்தினாளே!
கூறுவேன் ஒன்று ; கேண்மோ !
செம்மையில் அறஞ்செய் யாதார்
திரவியஞ் சிதற வேண்டி
நம்மையும் கள்ளுஞ் சூதும்
நான்முகன் படைத்த வாறே !

எப்படி இருக்கிறது பாட்டு! முதலிரண்டு வரியில் மட்டும் தான் உவமை. போதாதா!

[மேற்கண்ட பாடல்கள் விவேக சிந்தாமணியில் காணப்படுவன]

விற்பனையாகிறது.
சுப்பு ஆறுமுகம்
எழுதியவை.
கல்யாணக்கடன் 0-10-0
(சிறுகதைத் தொகுப்பு)
நல்ல உள்ளம் 0- 6-0
கவிஞர் **கண்ணதாசன்**
முன்னுரை
ஏஜண்டுகளுக்கு 25·I. கழிவு
விவரங்களுக்கு
சந்திரா பதிப்பகம்
4. தெற்கு மாட வீதி.
திருநெல்வேலி டவுன்.

வடக்கை வாழ்விக்கும் ஐந்தாண்டுத் திட்டம்

புள்ளி விவரங்கள்

(தொகுத்தவர் : ஈ. வி. கே. சம்பத்)

மிகப்பெரிய நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்கள்

(வடநாட்டில் இடம்பெற்றிருப்பவை)

	என்ன ?	எங்கே ?	எவ்வளவுசெலவு
1.	கோசித்திட்டம் (முதற் கட்டம்)	பீகார்	66 கோடி ரூபாய்
2.	பக்ரா-நங்கல் (முடிந்து விட்டது)	பஞ்சாப்	156 கோடி ,,
3.	ஹீராகுட் அணைக் கட்டு	ஒரிசா	92 08 கோடி ,,
4.	தாமோதர் பள்ளத் தாக்குத் திட்டம்	பீகார்-வங்கம்	இதுவரை 77 80 கோடி ,, (முடியும் போது மதிப்பிடப் பட்டுள்ளது 200 கோடி ரூ.)
5.	ரீகாண்ட்	உத்தரப்பிர தேசம்	35 கோடி ,,
6.	சம்பல்	மத்தியப் பிர தேசம்-ராஜஸ்தான்	35·75 கோடி ,,
7.	கொயினு (முதற் கட்டம்)	பம்பாய்	33 கோடி ,,

சென்னைக்கு நீர்ப்பாசனத் திட்டங்கள்

1.	கீழ்பவானி	9. 61 கோடி ,,
2.	மலம் புழா	3. 50 ,, ,,
3.	மேட்டூர் கால்வாய்	2. 45 ,, ,,
4.	மணிமுத்தாறு	3. 98 ,, ,,
5.	ஆரணி ஆறு	0. 95 ,, ,,

வடநாட்டில் பெரும் தொழிற்சாலைகள்

1.	சிந்திரி உர உற்பத்திசாலை	பீகார்	27. 40 கோடி (ஆண்டுதோறும் சேர்க்கப்பட்டு வரும் முதலீடு 15 கோடி)
2.	சித்தரஞ்சன் தொழிற்சாலை (ரயில் எஞ்சின்)	வங்கம்	15 கோடி ,,
3.	சிமெண்ட் தொழிற் சாலை	உத்தரப் பிர தேசம்	3. 80 கோடி ,,
4.	நேபா மில்ஸ்	மத்தியப்பிரதேசம்	4. 25 கோடி ,,
5.	இரும்பு உருக்கு தொழிற்சாலை	வடக்கே	110 கோடி ,,
6.	யந்திர சாதன உற்பத்திசாலை	வடக்கே	19. 58 கோடி ,,
7.	ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலை	வடக்கே	32. 25 கோடி ,,
8.	பெனிசிலின்	புனு	4. 22 கோடி ,,
9.	கனமின்சார உற்பத்தித் திட்டம்	வடக்கே	35 கோடி ,,
10.	இந்துஸ்தான இரும்பு உருக்கு தொழிற்சாலை (ஜெர்மன் திட்டப்படி)	வடக்கே	33 கோடி ,,
11.	இரும்பு உருக்கு தொழிற்சாலை (ரஷ்ய திட்டப்படி)	வடக்கே	50 கோடி ,,

ஆனல், தெற்கே.....?

வாழ்வது வடநாடு! வாடுவது தென்னுடு!

20-3-55 அன்றுஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்.

ஆசிரியத் தொழுகை..

வணக்கம். தங்கள்தென்றல் இதழில் ஆஸ்பத்திரிகள் குறித்து தங்கள் எண்ணத்தைவெளியிட்டீர்கள். சில டாக்டர்களும், நர்சுகளும் தங்களது கடமைகளை மறந்து அலட்சிய மனப் பான்மையுடன் நடந்து கொள்ளுகின்றனர் என்பது உண்மையே. அவர்களது தவறுகளை எடுத்துக் காட்டி கண்டிக்க வேண்டியது மிக்க அவசியம். தங்களது சிறிய முயற்சியை நான் பாராட்டுகிறேன். ஆயினும் சிலர் இதை ஓர் வாய்ப்பாகக் கருதி ஆஸ்பத்திரிகள் யாவற்றையுமே இரக்கமில்லா சாலைகளாகவும், காதல் கூடங்களாகவும் சித்தரிக்க முற்பட்டுள்ளனர். உதாரணமாக திருச்சி அன்பர் நாக சுந்தரம் அவர்கள் ஆண்நர்ஸ் வகுப்பையே தாக்கி தென்றல் 5-3-55 இதழில் எழுதியுள்ளார். தொழில் நிமித்தம் ஆணும் பெண்ணும் கலந்து உறவாடுவதைத் தவருன கருத்தில் கொள்வது சரியல்ல.

அவரது கருத்துக்கு மாருன ஓர் அனுபவத்தை நான் தங்களுக்குக் கூற விரும்புகிறேன். சில மாதங்களுக்கு முன் மதுரையில் எனது நண்பர் வீட்டிற்கு சென்றிருந்தேன். ஓரிரவு அவரது, 15-வயது மகன் ஒருவனுக்கு திடீரென்று நெஞ்சுவலியும், மாரடைப்பும் ஏற்பட்டு,சுவாசிப்பதற்குகஷ்டப்பட்டான். கைகால்கள் சில்லிட்டுப் போயின. நிலைமை மோசமானதாகத் தெரியவே சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அங்கு டாக்டர் இல்லை. ஆண்நர்ஸ ஒருவர் இருந்தார். டாக்டர் வார்டுக்குச் சென்றிருப்பதாயும், வர சிறிது நேரமாகும் எனவும் தெரிந்தது. ஆனல் பையனின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. அந்த ஆண்நர்சு டாக்டரின் வரவை எதிர்பாராது உடனே தேவையான ஊசிகள் போட்டு ஆக்ஸிஜன் வாயு (Oxygengas) கொடுத்து பையனைக்கவனித்தார். டாக்டர் வருவதற்குள் பையனது கஷ்டம் ஒருவாறு குறைந்தது. அந்த ஆண்நர்சு காட்டிய திறமையையும் சமயோசித புத்தியையும் நான் மிகவும் மெச்சினேன். அவர் சட்டத்தை நினைத்துக் கொண்டு டாக்டர் வரும்வரை பேசாதிருந்திருந்தால், பையனுடைய நிலைமை படுமோசமாயிருக்கும்.

ஆனல் அதில் சிலர் விதிவிலக்காக இருக்கலாம். அதற்காக ஆண் நர்சுகள் வகுப்பையோ, டாக்டர்கள் குழாமையோ மொத்தமாகத் தாக்குவது தவறல்லவா!

அன்பன்
கே. என். பிள்ளை.

பொன்மலை
7--3--55

★

அன்புடையீர்

தங்கள் 5-3-55 'தென்றல்' இதழில் வெளியிட்ட 'பேராசிரியர்' திரு வெ.சு. சுப்பிரமணிய ஆச்சாரியரின் நீண்ட கடிதம் கண்டேன். திகைப்புற்றேன். தமிழகத்தின் சிறந்த கல்லூரிகளில் ஒன்ருகத் திகழும் பச்சையப்பன் கல்லூரியில் இப்பேராசிரியர் பணியாற்றுகிருர் என்ருல் அது எட்டாவது அதிசயமே. அக் கடிதத்துக்கு தங்களின் பதில் கண்டேன். மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

எஸ். டி. அரசன்,

சென்னை-21.
8--3--55

★

ஐயா,

தங்கள் 4-3-55ந் தேதி தென்றலைப் பார்த்தேன். அதில் தாங்கள் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் வெ. சு. சு.வுக்கு கொடுத்த பதிலை கண்டவுடன் மகிழ்ச்சி அடைந்தேன்.

தங்களை வசைபாடி எழுதிய பேராசிரியரின் கடிதத்தை'தென்றல்' லில் வெளியிட்டு, அதற்கு பதில் எழுதிய தங்கள் பெருந்தன்மையை போற்றுகிறேன். வாழ்க நீவிர் பல்லாண்டு.

அன்பன்,
'அண்ணு அன்பன்'

வேலாணி
8--3--55

★

ஐயா,

5-3-55 தென்றலில் பச்சையப்பன் கல்லூரி பேராசிரியரது (வெ.சு.சு.) கடிதத்தைப் படித்தும் வருத்தம் ஏற்படுகிறது. தயவு செய்து தாங்கள் இருவரும் கடந்தவற்றை மறந்து, நட்பின் பேரில் ஆராய்ச்சி செய்து கட்டுரைகளை வெளியிட வேண்டுகிறோம். அது தென்றலின் வளர்ச்சியைக் குறிக்கும். தென்றலின் வாசகர்கள்,

கராபா,
வெற்றிவேந்தன்
கோவைசந்தானம்
கோயமுத்தூர். மா. கனகு.
5-3-55.



ஐந்தாண்டு திட்டத்தால் யாருக்கு லாபம் ?

ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி

மங்கை வேகமாக ஓடிவந்தாள்.

பின்னாலேயே ஓடிவந்தான் அவளுடைய காதலனும். அவர்கள் கரையை நெருங்கினர். அதற்குள் கமலினி, இடுப்பளவு தண்ணீருக்குள் இறங்கிவிட்டாள். ஓடிவந்த மங்கை "கமலினி" என்று கத்தினாள். அதே சமயம் பேரலை ஒன்று ஆரவாரம் செய்து மோதி எழுந்து வந்தது. அந்தோ! கமலினியைக் காணவில்லை.

மங்கையின் பாதங்களைக் கழுவிச் சென்றது அந்த அலை. மீண்டும் 'கமலினி' என்று கத்தினாள் மங்கை. அவளுடைய காதலன் அருகில் வந்து நின்றான். மங்கையின் கையைத் தொட்டான் 'அல்லி! இதோ பார்! கமலினியை மறந்துவிடு. வீணாகக் கவலைப்படாதே! களங்கத்துடன் வாழ கமலினி விரும்பவில்லை. உயிரை மாய்த்துக் கொண்டாள். அலைகடல் அவளை அணைத்துக்கொண்டது. வா! போகலாம்.' என்றான்.

மங்கை அழுதுகொண்டே அவனைப் பின்தொடர்ந்தாள். இருவரும் மீண்டும் அந்தப் பளிங்கு மண்டபத்திற்குச் சென்றனர்.

"அல்லி! இந்த வாழ்வு எனக்குப் பிடிக்கவேயில்லை. எத்தனை நாட்களுக்குத்தான் மறைந்து வாழ்வது? இப்பொழுது நீ விரும்பினாலும் நாம் புறப்பட்டுவிடலாம்" என்றான் அந்த வீரன்.

"நான் உடனே அன்னையிடம் போகவேண்டும். கமலினி இறந்ததையும், அவள் செய்த வேவு விபரங்களையும் கூறவேண்டும். அதற்குப்பின் அன்னையின் அனுமதி பெற்று, உங்களை வந்து அழைத்துப்போகிறேன்" என்றாள் மங்கை. அன்று மங்கைக்கு, அது இன்பம் தரும் இரவாக இல்லை. துன்பமே நிறைந்திருந்தது.

மறுநாள் காலை கோமளத்தீவிலிருந்து தன்னந்தனியாகப் புறப்பட்டாள். வழிநெடுக அவளுக்குக் கமலினியின் ஞாபகம்தான். சோழநாட்டில் பிறந்தாள் கமலினி. ஆலங்காட்டில் வாழ்ந்தாள். இடைதுறை நாட்டில் வேவு பார்த்தாள். கோமளத்தீவில் உயிர்துறந்தாள். தமிழ்ப் பெண்களின் கடமை, தன்மானம், வீரம் இவற்றை நினைத்துப் பார்த்தாள் மங்கை. சிறகு இழந்த பறவைபோல அவள் மனம் வேதனையுற்றது.

அன்னையின் மாளிகைக்கு வந்தாள் மங்கை. வீரர்கள் வணங்கி வழிவிட்டு நின்றனர். உள்ளே புகுந்த மங்கை திரைச்சேப் பக்கத்தில் வந்து நின்றாள். மங்கையைக் கண்டதும் நந்தினி ஓடிவந்து கட்டிக்கொண்டாள். "என்னைவிட்டு எங்கே சென்றாய். அடிக்கடி வருவாய் என்று நினைத்தேன். ஆனால் நீ..." என்றாள்.

மங்கை அவள் வாயைப் பொத்தினாள். நந்தினி அடங்கிவிட்டாள். பிறகு அன்னையிடம் கமலினியின் வேவு வேலை பற்றி விரித்துரைத்தாள். தற்கொலை செய்துகொள்ளப் போவதாகத் தன்னிடமும், நந்தினியிடமும் கூறியதைத் தெரிவித்தாள். முடிவில் உயிரை மாய்த்துக்கொண்டதையும் சொல்லி முடித்தாள். [illegible]கொண்டு நின்ற நந்தினி [illegible]ணீர் வடித்தாள். மங்கையும் அழுதாள். திரைக்குப் பின்னால் அன்னை கண்களைத் துடைத்துக் கொண்டதைப் பார்த்தாள் மங்கை.

அன்னைக்கு தைரியம் கூறினாள். நந்தினியின் கண்ணீரைத் துடைத்தாள். தானும் சிறிது நிம்மதி பெற வீட்டிற்குத் திரும்பினாள்.

☆

அத்தியாயம் 2

ஈழப்போருக்கு தளநாயகன் பயணம்

படையாளர்கள் பற்பல
வாகியபோர்ப்
படையாவையும் பண்பட
ஐப்ந்நூசிலைத்
தொடைபோடுயர் தோணிகள்
தூணியுற
வடிவேலொடு வாள்முனை
கையுளர்வார்

—இராவண காவியம்.

தளநாயகன் நந்தினியின் நினைவாகவே காலத்தைக் கழித்தான். பொழுது போவதே அவனுக்குச் சிரமமாக இருந்தது. காதல் நினைவு அவனை வாட்டிவதைத்தது. நந்தினியின் மாளிகைக்கு தளநாயகனே சென்று பார்த்தான். அவன் மனதைப்போலவே மாளிகையும் பாழ்வெளியாகக் கிடந்தது.

மரகதத்தை ஒருமுறை சந்தித்தால் நந்தினியைப்பற்றித் தெரிந்துகொள்ளலாமென நினைத்தான். ஒருநாள் மரகதத்தின் தோழி சித்தினியைச் சந்தித்தான். புரோகிதப் புஞ்சராயரின் வீட்டிற்கு, வடக்கிலிருந்து ஒரு மாமுனிவர் வந்திருக்கிறாராம். அரிசங்கமனுக்கும் நண்பராம். நடக்கப்போவதை முன்கூட்டியே அறிவிக்கும் ஞானியாம். அவருக்கு உபசாரணை செய்வதிலும், அவரைத் தேடி வருபவர்களை வரவேற்பதிலுமே மரகதத்திற்குப் பொழுது சரியாகிவிடுவதாக சித்தினி சொல்லிவிட்டுச் சென்றாள்.

'அந்த மாமுனிவன் யார்? ஏன் வந்திருக்கிறார். அவரிடம் நந்தினியைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியுமா?' என்று சிந்தித்தான். மாமுனிவரைப் பற்றி இராசேந்திரனிடம் தெரிவிக்கச் சென்றான். ஆனால், அரண்மனையில் அவனுக்கு வேறு வேலை காத்திருந்தது.

இடைதுறைப் போருக்குச்சென்று திரும்பிய இராசேந்திரன் கவனம் தெற்கே திருப்பப்பட்டது. பாண்டிய நாடு முழுவதும் பராந்தகன் காலத்திலேயே சோழநாட்டிற்கு அடிமையாகிவிட்டது. ஆயினும் அங்கிருந்து இலங்கைக்கு ஓடிய பாண்டியனின் வழி வந்தோர் பாண்டிய நாட்டை மீட்க எண்ணினர். இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தனின் உதவியால் அடிக்கடி சோழனுக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர்.

ஒற்றர்கள்மூலம் இச்செய்தி அறிந்தான் இராசேந்திரன். ஈழத்தை அடக்காவிட்டால் தமிழ்நாட்டில் நிம்மதி காணமுடியாது என்பதை அறிந்தான். உடனே படையெடுத்துச் சென்று, இலங்கையை வெற்றிகொள்ள முடிவுசெய்தான். இந்தச் சமயத்தில்தான் தளநாயகன் இராசேந்திரனிடம் சென்றான்.

தளநாயகனின் உள்ளத்தை ஏற்கனவே, அறிந்திருந்தான் இராசேந்திரன் நண்பனின் காதல் நோய் அவனைச் சித்திரவதை செய்கிறது என்பதை தளநாயகனின் முகக்குறிப்பிலிருந்தே தெரிந்துகொண்டான். எத்தனையோ ஒற்றர்களிடம் நந்தினியைப் பற்றியும் சொல்லியிருந்தான். ஆனால் ஒருவராவது நந்தினியைப் பற்றிய விபரம் தெரிவிக்கவில்லை.

தளநாயகனின் சோர்வுற்ற மனதை வேறு பக்கம் திருப்ப நினைத்தான் இராசேந்திரன். அவனுடைய படைத்தலைமையில் இராசேந்திரனுக்குப் பரிபூரண திருப்தியிருந்தது. இலங்கையை வெற்றிகொள்ள 'நல்லடி அணி'யை அனுப்பலாம் என்று முடிவு செய்தான். தளநாயகனைப் பார்த்ததும் தன் முடிவைத் தெரிவித்தான்.

தளநாயகனுக்கு இச்செய்தி இரட்டை மகிழ்ச்சியை அளித்தது. தூங்கிக்கிடக்கும் தோளுக்கும் வாளுக்கும் நல்ல பணி; சோர்வுற்ற உள்ளத்திற்கு மருந்து. தனது படையாகிய 'நல்லடி அணி'மீது இராசேந்திரனுக்கிருக்கும் நம்பிக்கை அவனது சோகத்தைத் துடைத்தது.

"நமது வலிவுபெற்ற கப்பற்படையுடன் நீ இலங்கை செல்லவேண்டும். ஐந்தாம் மகிந்தனை வென்று, நமது ஆட்சியை அங்கே நிலைநிறுத்த வேண்டும். நமது பிரதிநிதியாக ஒருவரை நியமித்து, படையின் ஒரு பகுதியையும் அங்கு பாதுகாப்புக்கு நிறுத்தவேண்டும். இதைச் செய்து முடித்து சீக்கிரம் திரும்பிவிடு. அதற்குள் நந்தினியைப் பற்றி நான் தகவல் அறிந்து தெரிவிக்கிறேன்" என்றான் இராசேந்திரன். தளநாயகனும் தன் நன்றியைத் தெரிவித்துத் திரும்பினான்.

மறுநாள் நகரெங்கும் பறையறிவிக்கப்பட்டது. படைகள் பயிற்சிக்காகப் போய் வந்துகொண்டிருந்தன. இன்னும் பத்தே நாட்களில் படைகள் ஈழத்திற்குப் புறப்பட்டுவிடும் என்று பேசிக்கொண்டார்கள்.

புரோகிதப் புஞ்சராயர் வீட்டில் அரிசங்கமனும் முனிவரும் ஒரு அறையில் பேசிக்கொண்டிருந்தார்கள். முனிவரின் முகத்திலே கவலைக் குறிகள் தென்பட்டன. "நீங்கள் ஒன்றும் யோசிக்கவேண்டாம். இன்றே அரண்மனைக்குச் செல்வோம். அரசருக்கு உங்களை அறிமுகப்படுத்துகிறேன். நீங்கள் முற்றும் துறந்த முனிவராக நடியுங்கள். எப்படியாவது ஈழத்தின் மீது படை எடுக்க மன்னனை அனுப்பலாம்" என்றான் அரிசங்கமன்.

சோழ அரண்மனையில் அரிசங்கமனுக்குச் சிறிது செல்வாக்கு இருக்கிறது என்பதை அறிவான் சந்நியாசிக் கோலத்திலிருந்த இடைதுறையான். ஆயினும், படையெடுப்பு திட்டமிட்டு நடத்தப்படும். அதிலும், கடல்கடந்து படைசெல்வதால், தகுந்த திட்டம் தீட்டப்பட்டிருக்கும். இதை முறியடிக்கும் சக்தி அரிசங்கமனுக்கு உண்டா? இதுதான் இடைதுறையானுக்குச் சந்தேகம்.

"உங்களுக்குத் தெரியாது அரிசங்கமனின் பலம். நினைத்த காரியம் இதுவரை தடைபட்டதில்லை. மன்னனைப் போருக்கனுப்பி விடவேண்டும். அவனுடன் பெரும் படையும் சென்றுவிடும். பிறகு, சுலபமாக நமது சதியை இங்கு விரிவாக்கி, சோழநாட்டையே கவர்ந்துவிடலாம். ஆனால் நாட்டை இழந்து, நாடோடியாய் நீங்கள் வந்திருக்கிறீர்கள். படைபலம் இல்லை. புத்திதான் நமக்குத் துணையாக இருக்கிறது. இதைச் சாதுரியமாக உபயோகிக்கவேண்டும். அதை நான் செய்வேன். உமது நடிப்பிலே சந்தேகம் தோன்றாது நடந்துகொள்ளுங்கள். அதுதான் முக்கியம்!" என்றான் அரிசங்கமன்.

அந்தச் சமயத்தில், பக்கத்து அறையில் பாத்திரம் உருண்டுவிழும் சப்தம் கேட்டது. இருவரும் திடுக்கிட்டனர். "யாரது?" என்று அதட்டினான் அரிசங்கமன்.

"நான்தான்" என்று கூறிக்கொண்டே மரகதம் அங்கு வந்தாள். இருவர் முகத்திலும் தோன்றிய கலவரம் நீங்கியது. "என்னம்மா அங்கே சத்தம்?" என்று கேட்டான் அரிசங்கமன்.

"பாத்திரத்தை எலி உருட்டிவிட்டது!" என்றாள். "நீ அங்கே வந்து நெடுநேரமாகி விட்டதா?" என்று கேட்டான் அரிசங்கமன். தாங்கள் பேசிக்கொண்டிருந்த ரகசியங்கள் அவளுக்குத் தெரிந்திருக்குமோ என்று பயந்தான். ஆனாலும் தன்மகள்தான் மரகதம். அவளிடமிருந்து செய்தி பரவுவதற்கு வழியில்லை.

'இப்பொழுது தான் அப்பா, இங்கு வந்தேன். உங்களிடம் ஒரு அனுமதி பெறவேண்டும்!" என்றாள் மரகதம்.

"என்ன அனுமதி?"

"என்தோழி சித்தினிக்கு இன்று பிறந்த நாளாம் என்னை அவள் வீட்டிற்கு அழைத்துப் போக வந்திருக்கிறாள்! நான் போய் சீக்கிரம் திரும்பி விடுகிறேன் அப்பா!"

மரகதம் இந்த நேரத்தில், அங்கு இல்லாமலிருந்தால் நல்லது என்று நினைத்தான் இடைதுறையான். "நீ போய் வாம்மா! தோழி கூப்பிட்டால் போகத்தானே வேண்டும்? அதுவும் பிறந்த நாள் அல்லவா!" என்றான். அரிசங்கமனும் சிரித்துக்கொண்டே "ஆமாம்! ஆமாம்!" என்றான்.

மரகதம் புன்னகையை அள்ளி வீசிவிட்டு ஓடி மறைந்தாள். ஆனால் அவளைப் பற்றிய சந்தேகம் இடைதுறையான் மனதை விட்டு மறையவில்லை. அவள் ஓடிச் சென்ற திக்கையே வெறித்துப் பார்த்தான். அரிசங்கமன் எவ்வளவோ தைரியம் சொல்லியும் அவன் மனம் சாந்தி பெறவில்லை. கடைசியில், மரகதம் எங்கு செல்கிறாள் என்பதை இருவரும் பார்க்க விரும்பினர். தெருவாசலுக்கு வந்தனர் அப்போது மரகதம் சித்தினியோடு தெருக் கோடியில் சென்று மறைந்தாள்.

இடைதுறையானுக்குச் சந்தேகம் வலுத்தது. அரிசங்கமனுடன் மரகதத்தைத் பின் பற்றிச் சென்றான். இருவரும் தெருக்கோடியின் திருப்பதிற்கு வந்தனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி திடுக்கிடச் செய்தது

சாலை ஓரத்தில் தளநாயகன் நின்று கொண்டிருந்தான். மரகதம் அவனுடன் பேசிக்கொண்டிருந்தாள். இடையிடையே சித்தினியும் பேசினாள். சில சமயங்களில் மூவரும் சிரித்தனர். சில சமயங்களில் மரகதம், தளநாயகனின் கேள்விக்குப் பதிலளிக்காது தயங்கி நின்றாள். இதைப் பார்த்ததும் அரிசங்கமனுக்கு ஆத்திரம் வந்தது. இடைதுறையான் கோபத்தால் குமுறினான்.

ஆனால் மரகதம் தளநாயகனிடம் பேசிய செய்தியே வேறு. இன்னும் பத்தே நாட்களில் படையுடன் இலங்கை செல்லப் போகிறான். அதற்குள் ஒரு முறை மரகதத்தைச் சந்தித்து நந்தினியைப் பற்றிய விபரம் அறிய ஆவல் கொண்டான். அதற்காகவே சித்தினியை அனுப்பினான். சித்தினியும் மரகதத்தை அழைத்து வந்தாள்.

இடைதுறை நாட்டின் மீது தளநாயகன் படையெடுத்துச்சென்ற பிறகு, நந்தினி காணாமற் போன விபரங்களைச் சொன்னாள் மரகதம். இருவருக்கு மிடையில் நடந்தபேச்சு இதுதான். தூரத்தில் சன்னியாசியுடன் நின்று கொண்டிருந்த அரிசங்கமனைப் பார்த்து விட்டாள் மரகதம். உடனே அவளுக்குப் பயம் தோன்றியது. தளநாயகனிடம் விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து நழுவி விட்டாள் மரகதம்.

கோபத்தினால் கொதிப்பேற வீட்டிற்குச் சென்றான் அரிசங்கமன். மரகதம் அங்கே வந்தாள். சந்தேகம் தலை விரித்தாட, நடந்ததைச் சொல்லும்படி மரகதத்தை வற்புறுத்தினான் அரிசங்கமன். அவளும் நடந்ததைச் சொன்னாள். ஆயினும் அவனுடைய பயம் நீங்கிய பாடில்லை.

இராசேந்திரனின் ஆலோசனை மண்டபத்தில் அறிஞர்களும படைத்தலைவர்களும் கூடியிருந்தனர். புரோகிதப் புஞ்சராயரும் இருந்தார். தளநாயகனும் அங்கேயிருந்தான். அரிசங்கமனும் சந்நியாசிகோலத்தில் இடைதுறையானும் அங்கே அமர்ந்திருந்தனர்.

காலம், சூழ்நிலை, படைவலிமை கடற்படை, எதிரியின் நிலை எல்லாம் ஆராயப்பட்டன எல்லோருக்கும் அவரவர் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க உரிமையளித்திருந்தான் இராசேந்திரன். எல்லோரும் அவனுடைய திட்டத்தை ஆதரித்தனர். ஆனால், அரிசங்கமன் ஒரு திருத்தம் கொடுத்தான்.

"இதுவரை நடத்திய போர்களில் மன்னர் இராசேந்திரரே நேரில் சென்று, எதிரிகளை அடக்கினார். அதிலும் தரையின மூலமாகவே நமது படைகள் நடந்து சென்று வெற்றி கண்டன. இப்போத திட்டமிடுவதோ இலங்கைப்படையெடுப்பு. இடையே நமது படைகள் கடலைக் கடந்தாக வேண்டும். இலங்கையில் திட்டப்படி கரையிறங்க வேண்டும். இலங்கைப் படைகளை முறையாகத் தோற்கடிக்க வேண்டும். இம்மாதிரி நடவடிக்கை நமக்கு இதுதான் முதல் அனுபவம். ஆகவே, வழக்கம்போல மன்னரும் படையுடன் செல்வதே சோழநாட்டின் பெருமை குன்றுதிருக்க வழி" என்றான் அரிசங்கமன். இதுவும் நல்ல யோசனை என்றுதான பலருக்கும் பட்டது.

இதை ஆமோதிப்பவர்போல அரிசங்கமனுக்கருகிலிருந்த சந்நியாசி எழுந்தார் "விஜயீபவ!" என்று ஆசீர்வதித்தார். மன்னரும் உடன் செல்வதே நன்மை பயக்கும் என்று தெரிவித்து அமர்ந்தார்.

இராசேந்திரன தளநாயகனைப் பார்த்தான். தளநாயகன் அதுவரை அபிப்பிராயம் எதுவும் கூறவில்லை. அரிசங்கமனின் திருத்தம் கேட்டு அவன்கொதித்தெழுந்தான்.

"இல்லை! மன்னர் செல்ல வேண்டிய அவசியமே இல்லை. மன்னரும் உடன்செல்ல வேண்டும் என்று சொல்வது, நமது படைகளின் வலிமையை அறியாதவர்கள் சொல்லும் வார்த்தை! மன்னர், தலைநகரில் சிறிதுகாலம் தங்க வேண்டும். உள்நாட்டுத்துறையில் அவர் கவனம் செலுத்தவேண்டும். இலங்கைப் படை எடுப்பை நான் வெற்றியாக முடிப்பேன. அதில் வீண் சந்தேகம் வேண்டாம்," என்று தளநாயகன் முழங்கினான்.

தளநாயகனையும் சிலர் ஆதரித்தனர். முடிவில் இராசேந்திரன தன் தீர்ப்பைத் தெரிவித்தான். "உள்நாட்டுத்துறையில் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம். நான் தலைநகரில் தங்கியிருக்க முடிவு செய்துவிட்டேன். நானும் போருக்குப் புறப்பட வேண்டுமென்று ஒரு சாரார் கருத்துத் தெரிவித்தனர். எனது மைந்தன்-இளங்காளை-திணவெடுக்கும் தோளான-இராசராசனை தளநாயகனுடன் அனுப்பிவைக்கிறேன்."

இச்செய்திநகரெங்கும் அறிவிக்கப்பட்டது. எல்லோரும் இச்செய்தி கேட்டு மகிழ்ந்தனர். ஆனால், அரிசங்கமனும் இடைதுறையானும் கறுவிக்கொண்டிருந்தனர். திட்டம் பாழாகிவிட்டதே என்று பதறினர். ஆயினும், சளைக்காமல் சதியை விரிவுபடுத்த முடிவுசெயதனர்.

பததாவது நாள் படைகள் புறப்பட்டன. நகர் முழுவதும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வீதிதோறும்-வாசல்தோறும - மாடந்தோறும் ஆடவர்-பெண்டிர் - குழுமி நின்றனர். படைகள் நடைபோடடுச் சென்றன.

"எம் இறை வாழ்க!
மன்னர் வாழ்க!
இளவரசர் வாழ்க!

என்று மக்கள் கோஷமிட்டனர். படைகள் நகரைக் கடந்து, துறைமுக நகரை அடைந்தன!

"வெள்ளம்போல வரும் படைகளைத் தடுத்து நிறுத்தவேண்டுமானால், இலங்கை மன்னன்-ஐந்தாம் மகிந்தன் பணியவேண்டும். இல்லையேல், இலங்கை தூசுபோல் துடைக்கப்படும்" என்று முதல் எச்சரிக்கை அனுப்பினான் தளநாயகன்.

பின்னர், பெரிய பெரிய கலங்களில் சோழ நாட்டுப்படைகள் ஏறிக்கொண்டன. ஆயுதங்களும், உணவுப்பொருள்களும் ஏற்றிக்கொண்டு கலங்களைப் பின்தொடர்ந்து நூற்றுக்கணக்கான தோணிகள் மிதந்தன. கடலில் ஒரு பெரிய நகரமே மிதந்து செல்வதுபோல் காணப்பட்டது.

நள்ளிரவில், ஈழநாட்டில் படைகள் கரையிறங்கின. போருக்கு வேண்டிய ஆயுதங்களை படைவீரர்கள் விரைந்து செய்தனர். அதற்குள்மகிந்தனிடம் தூதுசென்ற வீரர்களும் திரும்பினர். "சோழனிடம் பணியமாட்டோம். தொடுப்போம் போர்" என்று சூளுரைத்தானும் மகிந்தன். இது கேட்டு இளவரசன் இராசராசன கொதித்தெழுந்தான்.

தளநாயகன் பதறவில்லை. "நடக்கட்டும் நமது அணிகள்!" என்று உத்தரவிட்டான். படைகள் நடந்தன. நாள்முழுதும் நடந்த படைகள் பொலனுவரையை நெருங்கின. பொலனுவரை மகிந்தனின் தலைநகாம். அதைச் சுற்றிலும் மகிந்தனின் படைகள் காவல் காத்து நின்றன. பெரும்பகுதிப் படைகள் சோழன் அணிகளை எதிர்த்தன. ஆனால் வெள்ளம்போல் எதிர்த்து வரும் படைகளின் முன்னே, இலங்கைப் படைகள் எம்மாத்திரம்?

மகிந்தனின் படைகள பறமுதுஇட்டன. ஏராளமான வீரர்களைக் களத்திலே பலி கொடுத்தனர் இலங்கையர். மஞ்சிய படைகள் பின்வாங்கி ஓடின. பொலனுவரையைக் காத்துநின்ற மற்ற படைகளும் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந்தன. நகரத்தில் குழப்பம் ஏற்பட்டது. சோழன் படைகள் நகருக்குள் புகுந்தன. ஐந்தாம் மகிழ்ந்தன் சிறைபிடிக்கப்பட்டான். அவன் மைந்தன் கஸ்சிபன் எங்கோ தப்பி ஓடிவிட்டான். இலங்கை சோழனுக்கு அடிபணிந்தது.

அடுத்துச் செய்யவேண்டிய காரியங்களில் தளநாயகன் சுறுசுறுப்புக் காட்டினான். சோழனின் பிரதிநிதியாக பொலனுவரையில் ஒரு அணித்தலைவனை நியமித்தான். அவனுக்குப் பாதுகாப்பாக ஒரு பெரும்படையையும் நிறுத்தினான்.

எஞ்சியபடைகளுடன் இளவரசன் இராசராசனும், தளநாயகனும் நாடு திரும்ப, துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தனர். ஆனால், காலநிலை மோசமாக இருந்தது. கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. கலங்களைச் செலுத்தும் மாலுமிகள் இந்த நேரத்தில் புறப்படத் தயங்கினர். ஆனால் இளவரசன் இர்ரசராசனோ வெற்றிக்களிப்பில் மிதந்து கொண்டிருந்தான். உடனே புறப்பட ஆசைப்பட்டான். சோழநாட்டிற்கு, தன் வெற்றிச் செய்தியை தானே கொண்டு செல்ல ஆவல் கொண்டான்.

அவனுடைய ஆவலைத் தடுக்க தளநாயகன் விரும்பவில்லை. இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் ஓரிரவுப் பயணம் தான். இதை எளிதில் கடந்து விடலாம் என்றே முடிவு செய்தான்.

மீண்டும் கலங்கள் சோழநாட்டை நோக்கிப் புறப்பட்டன. நள்ளிரவு வானம் கறுத்தது. இடிமுழங்கியது, புயல் ஓங்கியது, மழை பெய்தது. கடல் குமுறி எழுந்தது. கலங்களின் மீது கட்டப்பட்டிருந்த பாய்கள் இறக்கப்பட்டன. சிறு கலங்கள் சில மூழ்கின. சில கலங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. என்ன செய்வதென்றே ஒருவருக்கும் புரியவில்லை. இளவரசனும் தளநாயகனும் ஒரே கப்பலில் இருந்தனர். அவர்களுடைய கப்பல் எங்கு சென்று கொண்டிருக்கிறது

என்பதேஅவர்களுக்குத் தெரியாது. கடல் அலையின் ஆரவாரம் அதிகமிருந்தது. அதனால், பக்கத்தில் வந்து கொண்டிருந்த படைக்கலங்களைப் பற்றிய விபரம் கூடத் தெரியவில்லை.

பொழுது விடிந்தது. கீழ்வானம் வெளுத்தது. புயல் அடங்கிற்று. மழை நின்றது. ஆனால் கரை காணாத கடல் நடுவே, தளநாயகனும், இளவரசனும இருந்த ஒருகப்பல் தான் சென்று கொண்டிருந்தது. அன்று முழுவதும் கப்பல் திசை மாறிச்சென்று கொண்டிருந்தது.மறுநாள்கப்பல் ஒரு கரையை அடைந்தது. சோழநாட்டின் ஒரு பகுதியில்கப்பல்கரைதட்டியதாகவே எல்லோரும்எண்ணினர்.

ஆனால், அங்கு மனித நடமாட்டமே காணப்படவில்லை. எல்லோரும் கப்பலிலிருந்து இறங்கினார்கள். சில படை வீரர்கள் முன் செல்ல, தளநாயகனும் இராசராசனும் பின் தொடர்ந்தனர்.

ஆனால் அது ஒரு வள மிகுந்த தீவு. மனித சஞ்சாரமே இல்லை. சிறிது தூரம் சென்றனர். ஒரு அழகான மாளிகையை அங்கே கண்டனர். நம்பிக்கை பிறந்தது. எல்லோரும் அந்த அலங்கார மாளிகையின் வாயிலை அடைந்தனர்.

வீரர்கள் நடந்து வரும் காலடிச் சத்தம் கேட்டதும், மூன்று அழகிய பெண்கள் பலகணியின் வழியாக எட்டிப்பார்த்தனர். அவர்கள் முகத்திலே சோகமும் வியப்பும் குடிகொண்டிருந்தன. இளவரசன் கண்களும அந்தப் பெண்களைச் சந்தித்தன. அவனுக்கும் அந்தச் சந்திப்பு ஆச்சரியத்தை அளித்தது.

தொடரும்

விரைவில்!
சொல்லின் செல்வர்
ஈ. வே. கி. சம்பத்
அவர்களின் பொருளாதாரக் கட்டுரை வெளிவரும்:

மார்ச் 19உ முதல்

சென்னையிலும்

மற்றும்

தமிழ்நாடெங்கும்

மூத்தோர் மொழி

எலிகளின் தொகை, அங்குள்ள பூனைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.

—டார்வின்

★

பலாத்காரம் எப்பொழுதும் அடிமைத்தனத்தையே வளர்க்கும்.

—ஆஸ்டின்

★

பகுத்தறிவுக்குட்பட்ட பொய்களை விட, பகுத்தறிவுக் கொவ்வாத உண்மைகள் தீமை பயப்பனவாகும்.

—அக்ஸலீ

★

நாக்கு மூன்று அங்குல நீளந்தான் இருக்கிறது; ஆனால் அது ஆறடி உயரமுள்ள மனிதனையும் கொன்றுவிடும்.

—ஜப்பானியப் பழமொழி

★

நண்பர்களின் உத்தேசங்களையும் நோக்கங்களையும் எப்போதும் அலசிப்பார்ப்பவன், மனிதர்களிடம் பழகவே பயங்கொள்ளுவான். கேவலமான காதற் கதைகளைப் படிக்கும் பெண்களுக்கு ஆடவரைக் கண்டாலே பயம் வந்துவிடும்.

—அறிவுத்திரன்

★

செயிக்கக்கூடிய வழக்குகளையும் தோல்வியடையச் செய்பவனைத்தான் வக்கீல் என்கிறார்கள்.

—ஜோன்ஸ்

★

அதிர்ஷ்டம் என்கிறார்களே, அது என்ன? வருகிற சந்தர்ப்பத்தை இறுகப் பிடிப்பதுதான்.

—'போண்ட்ஸ்'

★

எது நேர்ந்தாலும் சரி; ஒன்றும் நேராததுபோலவே எப்போதும் நடந்துகொள்.

—பென்னெட்

★

சுயமாக எண்ணுவதற்கு சக்தியுடையவர்கள், தங்களுக்கு எது சரி என்று தெரிகிறதோ அப்படியே வியாக்கியானம் செய்கிறார்கள். மூடர்கள் அதைப் பின்பற்றுகிறார்கள்.

—உதயசங்கர்

★

ஒரு பெண்ணிடம், அவள் அழகாக இருக்கிறாள் என்று ஒருமுறை சொல்லுங்கள்; குட்டிச்சாத்தான் அதை, அவள் காதில் பத்து முறை திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கும்.

—பிரஞ்சுப்பழமொழி

★



இராமன் வணங்கத்தக்கவனா?

சருக்கம் 46 சுலோகம் 23.

அப்பொழுது அசையாது, தரை யில் மூச்சுவிட முடியாது இருந் இராமலட்சுமணர்களைப் பார்த்து இருவரும் மாண்டுவிட்டனர் என்று நிச்சயித்து விட்டான்.

சுலோகம் 24.

போரில் வெற்றிபெற்ற இந்திர சித்தன் சந்தோஷத்தால் மெய் மறந்தவனாகி அரக்கர்கள் எல் லோரையும் உற்சாகப் படுத்திக் கொண்டு இலங்கைபுகுந்தான்.

இப்படி இந்திரசித்தனிடம் தோல்வியுற்று மயக்கமுற்றுக் கிடந்த இருவரையும் வானரர்கள் சூழ்ந்துகொண்டு கலங்குகின்றனர். முதலில் இராமன் மயக்கம் தெளிந்து எழுந்தவனாய், அடிபட்டுக் கிடக்கும் இலட்சுமணனைப் பார்த்து ஓவெனக் கதறி அழுகின்றான்.

சருக்கம் 49 சுலோகம் 3.

உடனே தம்பியை மிகவும் அடி பட்டு ரத்தம் தோய்ந்த முகத்தின னாகப் பார்த்து மெய்மறந்த அவர் மிகப் பரிதாபமாகப் பின்வருமாறு புலம்பினார்.

சுலோகம் 4.

இப்பொழுது போரில் தோல்வி யுற்று படுத்துக்கிடப்பவனாய் எந்த நான் பார்க்கின்றேனோ அந்த எனக்கு சீதையால் ஆவதென்ன ? உயிரினால்தான் ஆவதென்ன ?

சுலோகம் 6.

லட்சுமணன் மரணத்தை எய்தி விட்டான் எனில் நான் வானரர்கள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே உயிரை விட்டு விடப்போகிறேன்.

இப்படிப் பலவாறு புலம்பியழும் இராமன் தோல்வி நிச்சயம் என் பதைத் தெரிந்துகொண்டு சுக்ரீவனை சென்று விடுமாறு கூறுகின்றான்.

சுலோகம் 23

சுக்ரீவ! இந்த க்ஷணமே இவ் விடத்திலிருந்து நீ திரும்பிச் செல்ல வேண்டும்.

சுலோகம் 24.

அரசே பலசாலியாகிய இராவ ணன்என்னை விட்டுப் பிரிந்திருக்கும் உன்னை துன்புறுத்துவான்.

சுலோகம் 25.

சுக்ரீவ, நீலனோடும், நளனோடும் சேனைகளோடும், நண்பர்களோடும், அங்கதனையும் அழைத்துக்கொண்டு சமுத்திரத்தைத் தாண்டிவிடு.

சுலோகம் 31.

அந்த வானரர்கள் எல்லோரும் அவரது புலம்பலைக் கேட்டனர். கண் கள் சிவந்து கண்களால் கண்ணீ ரைச் சொரிந்தனர்.

இந்திரசித்தனின் வீரத்தைக் கண்ட இராமனுக்கு பயம் ஏற்பட்டு விடுகின்றது. மகனே இப்படி இருந் தால் தந்தை எப்படி யிருப்பானோ என்ற திகில் பிறக்க, சுக்ரீவனை படைகளோடு பின் வாங்கி ஓடும்படி கூறுகின்றான். முன்வைத்த காலை பின் வைப்பது வீரத்திற்கு இழுக் காகுமே என்று அவன் எண்ண வில்லை. எப்படியாவது உயிர்தப்பி னால் போதும் என்றநிலைக்கு இரா மன் வந்து விடுகின்றான். இப்படி பலமுறை மேகநாதனாலும், இரா வணனாலும் இராமன் தோற்கடிக் கப்பட்டு களத்தில் கதறுகின்றான். மற்றொரு உதாரணத்தைப் பார்ப் போம்.

சருக்கம் 102 சுலோகம் 2.

வீரனாகிய இலட்சுமணன் இரா வணனது வீரியத்தால் தோற்கடிக் கப்பட்டு எனது துயரத்தை வளர்ப் பவனாய் தரையில் கிடந்து சர்ப்பம், போல் புரண்டு துடிக்கின்றான்.

சுலோகம் 8.

கொடும் சோகம் அடைந்தவராய் புலன்கள் சிதறியவராய் பின்வரு மாறு கதறினார்.

தம்பியான லட்சுமணனைப் போர் புழுதியில் வீழ்த்தப்பட்டிருப்பவனாய் பார்த்து எனக்கு போரால் ஆவ தொன்றுமில்லை, உயிராலும் ஆவ தொன்றுமில்லை, சீதையாலும் ஆவதொன்றுமில்லை.

முதல்நாள் போரில் பெற்று வளர்த்த தந்தையையும், மறுநாள் போரில் அன்பிற்குரிய அண்ணனையும், மூன்றும்நாள் போரில் கரம்பிடித்துக் காதல் பேசிக் களிப்புத்தந்தகணவனையும் இழந்த வீரத் தமிழ்மங்கை ஒருத்தி மனங் கலங்காது, நான்காம் நாளில் போர்ப்பறை முழங்கியதும், பால் மணம் மாறாத தனது பாலகனை அழைத்து தளிர்க்கரங்களிலே வேலைத்தூக்கிக்கொடுத்து போருக்கு அனுப்பிய வீரவரலாற்றை புற நானூறு நமக்கு எடுத்தியம்புகின் றது. இந்த வீரக்கழனியில் இரா மனது கோழைத்தனம் மிகுந்த வரலாறு உலவலாம்? கடவுள் அம் சம் என்று சொல்லப்படும் இந்தக் கோழையிடம், தவவலிமையும், முனிபுங்கவர்களின் ஆசீர்வாதமும், சிறிப்பாயும் அஸ்திரங்களும் இன் னும் என்ன வெல்லாமோ இருந் திருக்கின்றன. ஆனால் ஒன்றுதான் இல்லை. அதுதான் வீரம்.

★

3. கோழையான கொலைகாரன்

இராமனது கோழைத்தனத்திற்கு எல்லாம் சிகரம் வைத்தது போன்றது அவன் வாலியை மறைந் திருந்து கொன்றது. அந்த வாலி வதை படலம் முழுவதும் படித்தால் இராமன் எவ்வளவு அயோக்கியன் என்பதை அறிந்து கொள்ளலாம். மரத்தின் பின் மறைந்து நின்று பாணத்தை எய்த இராமனை நோக்கி வீரவாலி கேட்கும் கேள்வி கள் சிறந்த தர்க்கரீதியில் பதில்கூற முடியாதவைகளாக அமைந்திருக் கின்றன. இராமனே அந்தக்கேள்வி களுக்கு பதில் சொல்ல முடியாத வனாக தடுமாறுகின்றான். ஆச்சாரி யாரும் அவரது சீடகோடிகளும் எங்கே கூறப்போகின்றார்கள்?

கிஷ்கிந்தா காண்டம் சருக்கம் 17, சுலோகம் 18.

உம்மைக் கண்டிராதபோது, வேறொருவனோடு சினங்கொண்ட வனாய் உம்மை கவனியாது இருந்த நேரத்தில் என்னை எதிர்க்க இரா மன் உடன்படான் என்று தீர்க்கா லோசனையின் மேல் விளைந்ததான எனது நிச்சயம் இருந்தது.

சுலோகம் 21.

உமது நாட்டிலோ. நகரிலோ நான் அபசாரஞ் செய்திலேன். உம்மை அவமரியாதையும் பண்ண வில்லை. இப்படி இருக்கையில் யாது காரணம் பற்றி வேறொருவனோடு போர்புரிந்து கொண்டிருந்தவனும் உம்மைச் சீண்டாதவனும், ஒரு பாவத்தை அறியாதவனுமான என்னை இவ்வாறு வதைக்கின்றீர்?

சுலோகம் 22.

க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவ னும், கசடறக் கற்றறிந்தவனுமான எவன் தர்மமூர்த்தியென வெளி வேடம் தரித்தவனாய் கொடிய செயலை செய்யத்தலைப்படுவான்?

சுலோகம் 23.

ராம! ராஜகுலத்தில் பிறந்தவ ரென்றும், தர்மவானென்றும், பெயர்கொண்டு விளங்குகின்றீர். தீத்தொழில் உற்றவனாய் நல்ல வன்போல என் திரிகின்றீர்?

சுலோகம் 30

இராமா தர்மத்தில் உனக்கு சலி யாது கௌரவித்தலென்பது இல்லை. ஒரு காலத்திலும் புத்தியானது நிலைபெற்றதாக இல்லை. மனம் போகிறபடி எதையும் செய்கின்ற வனாய் இருந்துகொண்டு ஐம்புலன் களால் அலைக்கப்படுகின்றீர்.

சுலோகம் 31.

ராம! இப்பொழுது குற்றம் செய் யாத என்னை பாணத்தை எய்து, அடித்துத் தள்ளிவிட்டு எப்படிப் பார்த்தாலும் அடாதகாரியத்தைச் செய்துவிட்டு புண்யாத்மாக்களுக்கு நியாயமென்கிற விஷயத்தில் யாது சொல்வீர்?

சுலோகம் 39.

மோசக்காரனும், நெறிதவறிய வனும், பொய்வேடம் தரித்த, நன் னடக்கையற்ற மனத்தினனும், நீசத்தொழிலிலேயே பற்றுடைய வனும் ஆகிய நீர் மகாத்மாவான தசரதரால் எப்படி பெற்றெடுக்கப் பட்டீர்?

சுலோகம் 42.

ராமா, உன் காரியங்களில் தலை யிடாத எங்களிடத்தில் காட்டப்பட்ட பராக்கிரமத்தை உனக்கு அபகாரம் செய்தவர்களிடம் காட்டவில்லையே.

சுலோகம் 43.

சக்கரவர்த்தியின் புதல்வ என் னால் பார்க்கப்பட்டு போர்புரிவீரென் றால் அப்பொழுதே நீர் என்னால் கொல்லப்பட்டவராகி யமதேவனை நேரில் கண்டிருப்பீர்.

அட நேர்மையற்ற கோழையே, உனக்கு நான் என்ன தீங்குசெய் தேன். உனது ஆளுகைக்கு உட் பட்ட பிரதேசத்தில்கூட நான்குற்றம் இழைத்திலனே. வேறொருவனு டன் போர்புரிந்து கொண்டிருந்த என்னை மரத்தின்பின் மறைந்து நின்று ஏனடா பேடியைப்போலக் கணையைத் தொடுத்தாய், உன்னைப் போன்ற பேடியை உனதுதந்தை எப்படிப்பெற்றார்? உன்மனைவியைக் தூக்கிச்சென்ற இராவணனிடம் உன் பராக்கிரமத்தை காட்டத்தைரியமற் றுபேடியைப்போல மறைந்திருந்து

—: ப. நெடுமாறன் :—

என்னைக் கொன்றாயே. அடாபோர் முறை தவறியவனே, எனது எதி ரில் நின்றிருந்திருப்பாயானால் அப் பொழுதே நீ மரணத்தைத் தழுவி யிருப்பாய் என்று வாலி பலவாறாக வீரமொழிகளைப்புகன்று இராமனை நிந்திக்கின்றான்.

சூரனை இராமன் வாலியைக் கொன்றதற்கு சமாதானங்கள் கூறு கின்றான். முதலாவதாக தம்பி யின் மனைவியிடம் தகாத முறையில் நடந்து கொண்டாய்; எனவே உன் னைக் கொன்றேன் என்று கூறு கின்றான். குற்றம் சாட்டும் இந்த யோக்கியன், ஜலந்திரன் என்னும் அரசன் இறந்துபட்ட பிறகு அவ னுடைய உடலில் புகுந்துகொண்டு அவன் மனைவியாம் துளசியை பல வந்தம் செய்த மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய இராமன் வாலியைக் குற்றம் சாட்டுகின்றான.

(தொடரும்)

இந்நாட்டு மன்னர் ரிக்ஷா இழுக்கும் காட்சி!

ஈழத்தில் இன்னலுறும் இன்பத் தமிழகத்தார்
வாழத்தான் பாதை வகுத்தாரோ ? — தோழா
மிகுவலியால் ஆண்ட மறத்தமிழர் மாண்பை
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

— குமரன், அருப்புக்கோட்டை,

☆

உருவில் அருட்கடவுட்(கு) ஓர் கோடி தோற்றி
மருளினம் வாழ வகுத்தார் — மருளோ
பகுத்தறிவின் மக்களையே ஆளுவது ? பண்போய் !
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— இராமசுந்தரம், மதுரை.

☆

தென்னவராம் மூவேந்தர் தன்னுயிராய் அன்றுவளர்
இன்றமிழை ஈண்டு இகழ்கின்றோன் — தன்னைச்
செகுத்தலிலே மாசுண்டோ செந்தமிழா நன்றாய்ப்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— தி. சாமிநாதன், அணைக்கரை.

☆

தேன்மழலைத் தித்திப்பு செல்வர்க்கே ; ஊணின்றி
பாண்குரலில் பாடிடுமா கம்பிள்ளை ? — மாண்பே
மகப்பேறுக் கெல்லை வகுத்தால் பிழையோ ?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— மு. சி. வெங்கடாசலம், திருச்சி.

☆

தித்திக்கும் செந்தமிழோ சீரழிந்த ஆரியமோ
எத்திக்கு மேசென் றிலங்கியது — தத்தி
வகுத்துரைக்க வாயற்ற ஆரியத்தா லாமோ ?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— செ. இராசமாணிக்கம். B. A. வெண்ணந்தூர்.

☆

காட்டும் ஒளிவிளக்கைக் கண்டும், திசைமாற்றி
ஓட்டுகின்ற கப்பல் உருப்படுமோ ? — ஏட்டில்
வகுத்தகுறள் போற்றாற்கு, வாழ்வினுயர் வுண்டோ ?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— ச. சித்தாராம், கோம்பை.

☆

மேதை எழுதிடுவார் மேலிடத்தார் போதிப்பார்
தாதை மொழிவார் ; சமயத்தார் — பாதை
வகுத்திடுவார் அத்தனையும் மானிடனே உந்தன்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— கலைவாணன், சிதம்பரம்.

☆

வருணச் செபத்தால் மழைவரும் என்றால்
அருணன் எழச்செயவும் ஆமோ ? — முரணாய்
புகுத்தினர் இக்காட்டில் பொல்லாக் கருத்தை !
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— தமிழ்த்தாசன், ஆசிரியர், சோலியமேடு

☆

நேர்மை அறிவாற்றல் நீதி வளஞ்சான்ற
சீர்மை மிகுந்துள்ள செல்வியரைக் — கூர்மை
வகுத்து வரம்பில்லா வாழ்வைப் பெருக்கும்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— வித்வான். கே. நாகேஸ்வரன், பக்காலா

☆

இல்லையென வந்திரக்கும் ஏழைக் கிரங்காது
தொல்லையெனக் கூறித் துரத்தலாமோ ? — எல்லாம்
வகுத்தவன் விட்ட வழியெனச்சொல் லாமற்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

— இரெ. தங்கையா B. A. திருமங்கலம்:

☆

விண்ணில் நிலத்தில் வியன்கடலில் தாவரத்தில்
தண்மலையில் மாற்றார் தரும்சொல்லில் — பெண்ணே !
புகுந்துள்ள உண்மைப் புதுமைகளை என்றும்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

— வித்துவான். வெங்கடேசன், நெல்லிக்குப்பம்

சரஸ்வதி

கலை இலக்கிய மாத இதழ்

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

முற்போக்கு எழுத்தாளர் பலரின் சிறு கதைகள், கவிதைகள், கட்டுரைகள் இடம்பெறுகிறது.

தனிப்பிரதி அணா 4. ஆண்டு சந்தா ரூ. 3.

விவரங்களுக்கு :

சரஸ்வதி

1, ராஜா அண்ணாமலை செட்டியார் ரோடு,
வேப்பேரி, சென்னை-7.

[முன்பு சமஸ்தானமாக இருந்த பீஜப்பூரைப் பற்றிய சுவையான செய்திகள் இதில் கூறப்படுகின்றன]

பீஜப்பூர்

பீஜப்பூர் எங்கேயிருக்கிறது ?

இந்தக் கேள்வியை யாராவது 17-ஆவது நூற்றாண்டில் கேட்டிருந்தால், அவனை ஒரு பைத்தியக்காரன் என்று கூறிவிடுவார்கள். ஏனென்றால் அந்த நாளில் பீஜப்பூர் ஒரு சாம்ராஜ்யத்தின் தலைநகராகத் திகழ்ந்தது. இப்பொழுது பீஜப்பூர் எங்கே யிருக்கிறதென்று கண்டு பிடிக்க ரயில்வேப் படத்தைத்தான் பார்க்கவேண்டி யிருக்கிறது.

எம். எஸ். எம். ரயில்வேயில் ஷோலாப்பூர்—கடக் லைனில், சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த நகரம் அமைந்திருக்கிறது. பொதுவாக, சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களுக்கு, குறிப்பிட்ட ரயில்வே ஸ்டேஷன்களிலிருந்து சில மைல் தூரம் கட்டை வண்டியிலோ அல்லது நடந்தோ தான் செல்ல வேண்டியிருக்கும். ஆனால், பீஜப்பூரைப் பொறுத்த வரையில், அந்தச் சிரமம் கிடையாது. ஊருக்கு ஒரு மைல் தூரத்திலேயே, ரயில்வேஸ்டேஷனை அமைத்திருக்கிறார்கள்.

எம். எஸ். எம். ரயில்வேயில் மிகப்பழைய வண்டிகளை உடைத்தெறிவதற்கு முன், இந்த லைனில் தான் ஓட்டுகிறார்களென்று நினைக்க வேண்டியிருக்கிறது. நாலரை மணி நேரத்தில் 58 மைல் செல்லக் கூடிய வேகமான 'ரயில்' வண்டிகள் இங்கே ஓடுகின்றன. ஜனங்களுக்கு மிகவும் சௌகரியமான நேரங்களில் ரயில் வண்டிகளை விடுவதாக, ரயில்வேக் காரர்கள் விளம்பரப் படுத்துகிறார்கள். இந்த சௌகரியமான வண்டிகளில் ஒன்று இரவு இரண்டரை மணிக்கு பீஜப்பூரை விட்டுப் புறப்படுகிறது. இதுவரை பத்திரிகைக் காரர்களும் சினிமாக்காரர்களும் தான் பொய் சொல்லுகிறார்கள் என்று நினைத்தோம். இனி ரயில்வேக்காரர்களையும் இந்த வரிசையில் சேர்த்துக் கொள்ளலாம்.

பீஜப்பூர், கடக் லைனில் இருப்பதாகக் கூறினேனல்லவா ? கடக் என்பது ஒரு பெரிய ஜங்ஷன். எம். எஸ். எம். ரயில் வேயின் முக்கியமான 'வொர்க் ஷாப்' களில் ஒன்று இங்கே யிருக்கிறது. இந்த ஊருக்கு 'கடக்' என்று ஏன் பெயர் வைத்தார்கள் ? எம். எஸ். எம். ரயில் வண்டிகள் 'கடக், கடக்' என்று பெரும் சப்த மிட்டுச் செல்கின்றனவே அதன் நினைவாக இந்தப் பெயரை ஒரு வேளை வைத்தார்களோ, என்னவோ ?

பீஜப்பூர் ரயில்வே ஸ்டேஷன் நந்தரமானது. ஸ்டேஷனுக்கு வெளியே சுமார் 60 டோங்காக்கள் காத்திருக்கின்றன. நமது ஊரில் ஜட்காவைப் போல, அந்த ஊரில் டோங்கா. இந்த டோங்காக்களை இழுப்பது குதிரைகள் தான் ; சந்தேகமில்லை. இந்த டோங்காக்களிலே ஒரு விசேஷம். மழையைப் பற்றியோ, வெயிலைப் பற்றியோ, அல்லது தெருப் புழுதியைப் பற்றியோ நாம் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில், கவலைப்பட்டுப் பயனில்லை; இவைகளிலிருந்து நம்மைப் பாதுகாக்க, டோங்காவில் எவ்விதமானவசதியும் கிடையாது.

இந்த ஊரைப் பற்றிச் சரித்திரம் என்ன கூறுகிறது ? 1451-ஆம் ஆண்டு துருக்கியில் சுல்தான் முராட் காலமானார். அவருடைய குமாரன் மகமது, சுல்தான் ஆனார். மகமதுவுக்கு, யூசுப் என்றோர் இளைய சகோதரன். துருக்கியின் அந்தக் கால வழக்கப்படி, சுல்தானின் சகோதரர்களையெல்லாம் அனைவரையும் கொன்று விடுவது வழக்கம். அம்மாதிரியே யூசுபையும் கொல்ல வேண்டுமென்று மந்திரிகள் மகமதுக்கு யோசனை கூறினார்கள். தனது இளைய குமாரனான யூசுபின் மீது அளவு கடந்த அன்பு கொண்ட அவனது அன்னை, அழகான ஓர் அடிமைப் பையனைப் பிடித்து, யூசுபைப் போல் வேஷம் போட்டு, அவனைக் கொல்லச் செய்தாள். உண்மையான யூசுப் 1460-ஆம் ஆண்டு இந்தியாவுக்கு ஓடி வந்தான்.

பீதார் சுல்தான் முகமது பஹாமனியிடம், யூசுப் வேலைக்கமர்ந்தான். ஆந்திர நாட்டில் எதிரிகளை முறியடித்து யூசுப் பேர் பெற்றான். யூசுபுக்கு ஐந்து பட்டணங்களை பீதார் சுல்தான் இனாமளித்து, அவனைப் பீஜப்பூர் கவர்னர் ஆக்கினான். பீதார் சுல்தானின் மரணத்துக்குப் பின், யூசுப் 1489-ஆம் ஆண்டு தனது சைன்ய பலத்தால், தன் சுதந்தரத்தை ஸ்தாபித்துக் கொண்டான்

1489-முதல் 1686-ஆம் ஆண்டுவரையில், இந்தப் பாரம்பரையினர் பீஜப்பூர் ராஜ்யத்தை ஆண்டனர். முகலாய வழக்கப்படி, கல்லறைகளும் சமாதிகளும் பெரிதாக அமைப்பதிலே பீஜப்பூர் ராஜாக்கள் ஒவ்வொருவரும் போட்டி போட்டனர். அதன் விளைவாகத்தான், உலகில் பெரிய கோல் கும்பாஸ் எனும் டோம், பீஜப்பூரில் கட்டப்பட்டிருக்கிறது.

மேத்தர் மகால் என்றொரு கட்டிடம் இருக்கிறது. இதைப்பற்றிக் கூறப்படும் கதை ருசிகரமானது. இப்ராஹீம் அரசருக்குக் குஷ்ட நோய் இருந்ததாம். அதற்குப் பரிகாரம் தேடுவதற்காக, தமது அரண்மனை ஜோசியரை அழைத்து இப்ராஹீம் ஆலோசனை செய்தார். அரண்மனை ஜோஸியர் அரசனைப் பார்த்து, 'மன்னரே ! நாளையதினம் நீங்கள் யாரை முதன் முதலில் சந்திக்கிறீர்களோ, அவருக்கு ஏராளமான திரவியத்தைக் கொடுக்க வேண்டும். அதுதான் இதற்குப் பரிகாரம்' என்றார். ஜோசியர் தாமே மறுநாள் காலையில் அரசனைச் சந்தித்து இந்தத் திரவியத்தைப் பெற எண்ணியிருந்தார். ஆனால் விஷயம் வேறு விதமாக முடிந்தது.

அரசன் அதிகாலையில் எழுந்து வெளியே வந்தான். முதலில் ஒரு மேத்தரைச் (சந்தித் தெருப் பெருக்கும் சகோதரன்) சந்தித்தான். மேத்தருக்கு அடித்ததுஅதிர்ஷ்டம். அரசன் கொடுத்த பொருளைக் கொண்டு, மேத்தர் ஒரு மகால் கட்டினான். அதுதான் மேத்தர் மகால். இந்தக் கதை எவ்வளவு தூரம் உண்மை என்பது நமக்குத் தெரியாது. ஆனால் கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கிறது.

'சக்தி'

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், எம்.ஏ., எல்.டி.

பதில் தருகிறார்.

நா. ப. இராமசாமி, நாமக்கல்

பழங்காலத்தில் தமிழகத்தில் ஊரவையின் அங்கத்தினர் குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டனர் எனக் கூறப்படுகிறது. குடவோலை முறை என்றால் என்ன? அதன் மூலம் எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதை விளக்குக.

தகுதி உடையவர்கள் பெயர்களெல்லாம் சீட்டுக்களில் எழுதப் பட்டு, ஒரு சீட்டு சிறுவர் கைப்பட எடுக்கப்படும். அவரே தேர்ந்தெடுக் கப்பட்டவராவார். இதுவே குடவோலை முறை.

★

அ. அங்கமுத்து, அரியலூர்

தஞ்சையை ஆண்ட சுந்தரசோழனின் முதல் மகன் கரிகாலன் சூழ்ச்சியால் கொல்லப்பட்டதாகக் கல்வெட்டுக்களில் இருப்பதாகச் சொல்லுகிறார்களே, அவன் ஆரிய சூழ்ச்சியால் இறந்தானா? அன்றி அரசியல் காரணங்களால் கொல்லப்பட்டானா? வரலாற்று விளக்கம் கூறுக.

ஆரிய சூழ்ச்சியால் அல்ல, அரசியல் சூழ்ச்சியால்தான். பொறாமையும் அடுத்த அரசுரிமைப் பட்டமும் தான் காரணம்.

★

பி. ஆர். சங்கரன், சேலம்

இளங்கோவடிகள் இயற்றிய நூலான சிலப்பதிகாரத்தில் திங்கள், ஞாயிறு, மழை ஆகியவற்றைப் போற்றக் காரணம் என்ன? விளக்கம் தருக.

மங்கல வாழ்த்தாகவும், மூவேந்தர் ஆட்சிப் பண்புகளைக் குறிப்பவையாகவும் அவ்வாழ்த்துக்கள் அமைகின்றன.

★

எஸ். சித்து, போத்தனூர்.

“ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்கின்றீரே, அந்த ஒரு குலம் எது? தேவன் - ஆண்பாலைக் குறிக்கிறது. அவன் யார்?

ஒருகுலம்-மனிதகுலம். மனிதன் ஆண்பால் சொல்லாயினும் இனஞ் சுட்டி இருபாலையும் குறிக்கிறது. அதுபோல தேவன் பால்பகாப் பொதுச் சொல்.

★

மைதீன், கொழும்பு 12

ஆஸ்திகம் என்றால் என்ன? நாஸ்திகம் என்றால் என்ன? இவற்றுக்கு விளக்கம் தருக!

கடவுள் உண்டு என்று நம்புவது ஆஸ்திகம். இது நம்பிக்கை அடிப்படையானது. இதை மறுப்பது அல்லது நம்பாதிருப்பதுநாஸ்திகம். இரண்டிலும் அறிவு அடிப்படையான வாதமும் உண்டு. போலி நம்பிக்கைகளும் உண்டு.

★

மு. பெரியசாமி, கலிங்கமுடையான்பட்டி

தமிழில் ‘ஙகர’ வரிசையில் உள்ள பதின்மூன்று எழுத்துக்களுள் ‘ங’, ‘‘ங்,’ தவிர மற்ற பதினொரு எழுத்துக்களும் உபயோகத்தில் இருக்கின்றனவா? இருந்தால் ஒவ்வொருஎழுத்திற்கும் ஒவ்வொரு வார்த்தை உதாரணம் கொடுக்கவும். அதேபோல் ‘ஞகர’ வரிசையில் உள்ள பதின்மூன்று எழுத்துக்களுள் ‘ஞ்’, ‘ஞா’ தவிர மற்ற பதினொரு எழுத்துக்களும் உபயோகத்தில் இருக்கின்றனவா? இருந்தால் ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு வார்த்தை உதாரணம் கொடுக்கவும்.

ங, ங், தவிர ஏனைய எழுத்துக்கள் வழக்கில் இல்லை. ஞ், ஞா, அல்லாத எழுத்துக்களில் சில வழக்கில் உண்டு, ஞமலி, ஞிமிறு, பைஞ்ஞூலம், ஞேயம், காண்க.

★

எம். பி. மணியன், மதுரை

(அ) ‘மடல் ஏறுதல்’ என்றால் என்ன? விளக்குக.

(ஆ) மொழியியல் துறையில் சிறந்த ஆராய்ச்சியாளராக விளங்கும் இரு தமிழ் நாட்டவர் பெயரைக் குறிக்கவும்.

(அ) விரும்பிய பெண்களைச் சுற்றத்தார் தர இணங்காவிட்டால் தலைவன் பனைமடலால் ஆனகுதிரை மீதேறி சாகும்வரை அதிலிருக்க உறுதிகொள்வான். பெரும்பாலும் சுற்றத்தார் இணங்கி வருவர். இதுவே மடலேறுதல் என்னும் துறை.

(ஆ) தலைசிறந்த ஆராய்ச்சியாளர். ஞா,தேவநேயப்பாவாணர். அடுத்தபடி டாக்டர் வரதராசனாரைக் குறிப்பிடலாம்.

★

எஸ். சந்திரன், புதுக்கோட்டை.

‘தூங்கெயில் எறிந்த தொடி
விளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச்
செம்பியன்!

என்று சிறுபாணாற்றுப்படை 80-81 ல் வருகிறதே, செம்பியன் என்றால் யார்? எந்நாட்டு அரசன்? தூங்கெயில் என்பதன் பொருள் யாது? விளக்கம் தருக!

செம்பியன் என்பது தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன். இவன் சோழர் முன்னோன் என்று கூறப்படுகிறான். இது கிட்டத்தட்ட புராண மரபு. அதன் உண்மை முழு அளவில் அறியுமாறு இல்லை. தூங்கெயில் என்பது பறக்கும் கோட்டை. உண்மையில் அது மணி போல் கட்டப்பட்ட செயற்கை மலைக் கோட்டையாக இருந்திருக்கலாம். இத்தகைய கோட்டை பாபிலோனிலும் இருந்ததாக அறிகிறோம்.

★

கே. சுப்ரமணியன், விழுப்புரம்

தமிழ் எழுத்து அடங்கிய அட்டையில் அகரத்திற்கு முதலில் ‘ஹரி நமொத்து சிந்தம்’ என்று எழுதி இருக்கிறது. அதன் பொருள் என்ன? அது எம்மொழியைச் சேர்ந்தது?

திருமால் வணக்கத்துக்கு உரிய வராகுக என்ற பொருளுடைய வட மொழித் தொடர். இடைக்காலத்தில் (16, 18 நூற்றாண்டுகளில்) புகுத்தப்பட்டிருக்கலாம்.

★

சு. உத்திராபதி. வண்ணையம்பதி

மறைமலையடிகள் எழுதிய நூல்கள் எதுவும் தற்பொழுது கிடைக்க வில்லை. புத்தக விற்பனையாளர்களைக் கேட்டதில் அவர் எழுதிய புத்தகங்களுக்கு அரசாங்கம் தடை விதித்திருப்பதாகக் கூறுகின்றார்கள். அது பற்றிய வழக்கும் நடந்து வருகின்றதாம். இது உண்மையா? அங்ஙனமாயின் தடை விதிக்க வேண்டிய அவசியமென்ன?

அரசாங்கம் தடை விதிக்கவில்லை. நடக்கும் வழக்கு அவர் இறுதிப் பத்திரம் பற்றியது. நூல் வெளியிடும் உரிமை அப்பத்திரம் சார்ந்தது. வழக்கு முடிந்த பின்தான் பெரும்பாலும் கிடைக்கும்.

★

வி. பாண்டியன். சின்னமனூர்

தண்ணீருக்குள் மூழ்கிய பிணம் அழுகி சில நாட்களில் மிதப்பதற்கும், தண்ணீரில் மிதக்கும் இலை தழைகள் அழுகிச் சில நாட்களில் மூழ்குவதற்கும் காரணம் என்ன? விளக்கம் தேவை.

பிணம் நீரேறிப் பெரிதாகிறது. கனம் குறைகிறது. ஆகவே, மிதக்கிறது. இலை தழைகளில் இலேசான உயிர்ப்பொருள்கள் நீரில் கலந்துவிடுகின்றன; மற்ற பகுதி தாழ்கிறது.

★

செ. முருகராசேந்திரன், கோவை

குறளில் வரும் ஊடுதல், கூடுதல் பசலை என்ற சொற்களுக்குப் பொருள் யாது, விளக்கம் தர வேண்டுகிறேன்.

கூடுதலென்பது கண்டு,உரையாடி மகிழ்தல். ஊடுதல்,ஒருவர் காதலை ஒருவர் ஆராயும் வகையில் பிணங்குதல் பிரிவு காலத்தில் பெண்டிர் உடல் வெளுத்துப் பசப்பு ஊறுதல், பசலையாகும்.

★

மா. சண்முகசுந்தரம் கோவை,

முத்தொள்ளாயிரம் தொகை நூலா? அல்லது ஒரே நூலா? ஒரே நூலாயின் ஆசிரியர் யார்? ஆசிரியர் குறிப்பு தேவை.

முத்தொள்ளாயிரம் ஒரே நூல் தான். ஆனால் தொகை நூலாயிருக்கக்கூடும். ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.

★

எம். லிங்கம், பூக்குளம்

கடவுள் எங்கே என்று கேட்பவர்களை ‘உங்கள் உடலில் உயிர் எங்கே இருக்கிறது என்று கேட்கிறேன்’ என்று முத்துராமலிங்கத் தேவர் பேசியிருக்கிறார். இதற்குப் பதில் விளக்கம் தரவும்.

உயிரில்லாத உடலைக் கண்டிருக்கிறோம். அதில் உயிரின் செயல் இல்லை. உலகத்தில் இந்த நிலையைக் காணமுடியாது.

◉

விலை குறைப்பு!

தென்றல்

பேராசிரியர் மலர்!

விலை அணா 8 தான்!

பல நண்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க விலை குறைக்கப்படுகிறது.

குறிப்பு: இதுவரை முன்பணம் ஒரு ரூபாய் அனுப்பியவர்களுக்கு மலர் அனுப்பிவைத்து, பாக்கி எட்டணாவும் திருப்பியனுப்பப்படும்.

ஏப்ரல் 10வயன்று எங்கும் கிடைக்கும்

எழுதுக:—

தென்றல்

சென்னை-6.

வெண்பாப் போட்டி 6

இரட்டைப் புலவர் முறை

[கீழ்க்காணும் முதலிரண்டு அடிகளை, தான் ஒரு புலவராக நின்று தென்றல் தருகிறது. தனிச்சீருடன் பின் இரண்டடி எழுதி முடித்து அனுப்புக:-]

முதலிரு அடிகள்:

கார்கூந்த லேறிக் களித்திருந்த மல்லிகையே
ஆர்செய்த வஞ்சகத்தால் அல்லலுற்றாய்?—

முடிவு தேதி 2-4-55

நீதிபதி ‘சகி’ தென்றல் :: சென்னை-6

வெண்பாப் போட்டி

4. பகுத்தறிவால் ஆராய்ந்து பார்!

◉ சாந்தை மசித்தாடும், சட்டுவத்தின் தோசைக்கு
சாந்தி அருளுமோ, ஆட்டுக் கல் ? -- சாந்தைப்
புகுத்தி நிறுத்தவருள் பொங்குமோ லிங்கம் ?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

— க. இராமசாமி, தலைமை ஆசிரியர், ஆயப்பாடி

★

அங்குசத்தில் யானை அடங்கி நடந்தாலும்
பொங்கிற் பொறுப்பானே பாகனவன் ? -- நங்காய் !
உகுத்தகண்ணீர் ஏழை உணர்ந்தெழுந்தால் என்னும்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார் !

— வை. இறையழகன், பழைய ஆயக்குடி.

★

சொர்க்கம் உளதென்பார் தொல்லுலகில் மேலான
வர்க்கம் தமதென்பார் ; வாய்சோர -- தர்க்கம்
புகுத்திடுவார் இவ்வையம் பொய்யென்பார் மெய்யை
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்!

— க. முத்தையா, B. Ed. அண்ணாமலை நகர்.

★

தாய்மொழியை விட்டுத் தயங்கா தயல்மொழிசொல்
காய்பறித்த லென்?கன்னல் கொண்டக்கால் -- தாய்மை
வகுத்தநெறி வாய்மைவளம் வான் புகழாம் மெய்ம்மைப்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— இரா. சித்தனார், தமிழாசிரியர், சேலம்.

★

கல்விக் கரசி கலைமடந்தை யாளிருந்துங்
கல்லார் மலிந்திருக்கக் காரணமென் ? -- நல்லார்
வகுக்கும் முறையாக வாய்த்திலதாம் அன்றோ ?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

— வி. வரதராசன், சென்னை-12

★

கண்ணீர் துளிபெருகிக் காணுறும் போர்தொடுக்கக்
கண்ணே, களமமைத்தார்; செல்கின்றேன் ! -- கண்ணீர்
உகுப்பதுமே னன்பே ! கடமைஈ தன்றோ ?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— அன்புரையன், அம்மையப்பன்.

★

எதுவேண்டும் ? ஏந்தும் குறளா, மனுவா ?
புதுமையா, தொன்மையா ? பாவில் -- அதனைப்
புகுத்திக் குறளை மறைக்கும் புலவா
பகுத்தறிவால் ஆராய்ந்து பார் !

— இரத்தின. மனோகரன், கோலார் தங்கவயல்.

★

சோவி உருட்டிப்பொய்ச் சோதிடம் சொல்லிவாழும்
பாவியை நம்புகின்ற பாமரனே -- ஆவி
நிகர்த்தவர் கூறினும் நீயதை என்றும்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— இரா. ப. மனோகரன், மதுரை.

★

மேருமலை யுச்சிக்கண் மேவு புலிவில்மீன்
பாருணர வைத்த பழந்தமிழர் -- ஒரும்
பகுத்தறிவில் லார்வாழ பண்புற்றார் தாழ்வேன் ?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— அரு. க. காரழகன், சென்னை 30

திருந்தா மொழிபுணர்ப்பார் சீர்கயமே சொல்வார்
பொருந்தா உவமை புகல்வார் -- மருந்தே !
சகதியில்தான் சந்தனத்தைச் சேர்த்தால் சரியா ?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— எ. பார்த்தசாரதி, கரூர்.

★

எல்லா உயிர்க்கும் இறையொருவன் உள்ளானேல்
வல்லார்கள் செல்வத்தால் வாழ்ந்திடவே -- பல்லோர்
மிகுத்த வறுமையால் மென்மையுறல் ஏனோ?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— முரலி, சென்னை 2

★

கந்தன் கருப்பன் கருங்காளி சாத்தப்பன்
விந்தன் சிவன்பிரும்மா வேம்பாத்தாள் -- இந்த
விகாரவடி கற்சிலைகள் வேண்டும் இறையோ ?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார் !

— நாரண. மருதவாணன், தி. வெ. நல்லூர்.

★

பண்டைப் புலவோர்தம் பாட்டுக்(கு) உரைகாரர்
கொண்டபொருள் முற்றும்நீ கொள்ளாதே -- பண்டு
தொகுத்தவர்தாம் சொல்லியதைத் தூமொழியே ! நீயுன்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

—கே. சீனுவாசன், செங்கல்பட்டு

★

பண்டு தமிழ்ச்சங்கப் பெண்டிர்க்கு மங்கலநாண்
உண்டென் றறைகின்றார் ஓர்சிலர்தாம் -- கண்டு
நகுதல் புரியாதோ நானிலமே ஈதைப்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

—வே. அர. சைலவாசன், வேலூர்.

★

சாலப் பெரியோர்கள் சாற்று முறையினிலும்
காலப்போக் கால்பேதம் காணலாம் -- ஞாலம்
தொகுத்தளந் நீதியையும் தொன்மையென் றேற்காதே
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

— கு. இரமாதேவி, சென்னை 1

★

இன்றுமுத லாளிகளோ இல்லையென் றோர்கூலி
அன்றே செலவுதனை; அன்பேநான் -- நன்றாய்
வகுத்துச்செய் என்றேன்நீ வம்புமிகச் செய்தாய்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— சிதம்பர. வேங்கடாசலம், அரியக்குடி.

★

அன்றாடம் சோற்றுக்கு அல்லலுறும் இந்நிலையில்
சென்றுடுக்க வாங்குகெண்டைச் சேலைநீ -- என்றே
தொகுத்துரைத்த தேசரியா தோகையே உன்றன்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

— சித. நாச்சியப்பன், காரைக்குடி.

★

பணத்தால் மணந்தோன் பிணமானான்; இன்பு
உணர்வால் விதவை உவந்து -- மணந்தாள் !
இகழ்ந்தார் ; விபசாரி என்றார் ; சிரித்தாள் !
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

— தகடூரான். கூத்தப்பாடி.

★

உண்டு கொழுத்தார் ஒருசாரார் ஊணின்றி
தொண்டுபல செய்தெலும்பு தோலானார் -- பண்டு
வகுத்தா னிறையென்பர் வன்னெஞ்சர் என்கொல் ?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்

—க. வீ. குருசாமி, சென்னை 23.

(10-ம் பக்கம் பார்க்க)

◉ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

தென்றல் திரை

15-3-55 இதழ்
படித்தீர்களா ?
எந்தப்பத்திரிகைகளிலும்
வெளிவராத படங்களும்
சுவையான விநோதமான செய்திகளும்.
விலை அணா 4
ஆண்டு சந்தா ரூ. 3

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed
[redacted] at Elangovan Printers, 28, Muthu Mudali St., Madras-14.